விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 262 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை (07.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT BBA (Hons)
(C-3820) OCTOBER INTAKE 2025 அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI 239 Arasadi Road, Kanthatmadam Junction, Jaffna
021 7534 807

ஜெனிவாவில் செம்மணி உள்ளிட்ட

## முக்கிய விவகாரங்கள் தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத் விசேட உரை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நாளை (8) திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

இம்முறை இலங்கை தொடர்பிலான விவாதம் இடம்பெறவுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று காலை ஜெனிவாவுக்குப் பயணமாகவுள்ளார்.

நாளைய அமர்வில் பிற்பகல் ஒரு மணியளவில் அமைச்சர் இலங்கை தொடர்பிலான சமர்ப்பணங்களை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

நேற்று மட்டும் நான்கு சூட்டுச் சம்பவம்

## அதிருகிறது இலங்கை பதறுகிறது எதிர்க்கட்சி

(கொழும்பு)

தென்னிலங்கையில் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

குறிப்பாக நேற்று மாத்திரம் 12

23ஆம் பக்கம் பார்க்க

## விபத்துக்களைத் தடுக்க மக்களாதரவு தேவை

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

(தங்காலை)

எல்ல - வெல்லவாய பேருந்து விபத்துப் போன்ற துயரங்களைத் தடுக்க அரசாங்கம் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த முடி

23ஆம் பக்கம் பார்க்க

# மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஏற்க முடியாது

இலங்கை அரசு பதிலளிப்பு

*(ஜெனிவா)*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கைக்கு, ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதித்துவ அலுவலகம் பதிலளித்துள்ளது.

இதன்படி மனித உரிமைகள் பேரவையின் 57/1 தீர்மானத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இலங்கையின் பிரதிநிதித்துவ அலுவலகம் தெளிவுபடுத்தியுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## விமலிடம் சி.ஐ.டி கிடுக்குப்பிடி விசாரணை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் மூன்று மணி நேரத்துக்கும் மேலாக விசாரணைகளை மேற்

23ஆம் பக்கம் பார்க்க

- காற்றாலைக்கு எதிர்ப்பு -

## 36ஆவது நாளாக நேற்றும் மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

மன்னாரில் காற்றாலைக் கோபுரங்கள் அமைத்தல்



23ஆம் பக்கம் பார்க்க

உடையார்கட்டில்

## கோர விபத்து; ஒருவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியில் நேற்று மாலை

23ஆம் பக்கம் பார்க்க

## பாதாள உலகக்குழுத் தலைவர் மதுஷங்க ஓமானில் கைது

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த பாதாள உலகக் குழுத் தலைவரான 'மிதிகம சூட்டி' என அழைக்கப்படும் பிரபாத் மதுஷங்க ஓமான் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் தென்னிலங்கையில் செயற்படுகின்ற பாதாள உலகக் குழுவின் தலைவர் எனவும் சர்வதேச

23ஆம் பக்கம் பார்க்க

தாமதிக்காமல் நிறைவுக்கு முந்தய விலையில் பெற இப்போதே முந்துங்கள்



PAY ONLY 40%
MARINA SQUARE UPTOWN COLOMBO
(C-269)
MARINASQUARE.LK
+94 77 2272 727
*T&C apply

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

Youtube சேனல் ஒன்றுக்கு Voice Artist, video jockey, வீடியோ எடிட்டர் வேலைக்கு ஆட்கள் தேவை.

பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**074 111 3822**

(5342)

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

1. தளபாட பெயின்ரர் (75,000/= மேல்)
2. வேலை பழக விரும்புபவர்கள் (25,000/= மேல்)
3. தச்சு வேலையாட்கள் (90,000/= மேல்)

நிரந்தரமான வேலையும் தங்குமிட வசதியும் உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**

35, கொட்டைக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கு. (பஸ் டிப்போ அருகாமை)

**021 221 9909, 077 300 1763**

(5337)

## வாடகைக்கு

28, காளியாள்மூலை ஒழுங்கை, நுணாவில் சாவகச்சேரியில் அமைந்துள்ள (A9 வீதியிலிருந்து 300m தொலைவில்) 11627 சதுர அடி கொண்ட கட்டிடம் வாடகைக்கு உண்டு. 3 பேஸ் மின்சார வசதி, வாகனத் தரிப்பிட வசதியும் உள்ளது.

**077 134 9267**

(5344)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பரும் பல்வேறு வழிகளில் எம்மை ஆற்றுப்படுத்தி எமக்கு உறுதுணையாய் இருப்பவரும் பிரபல சமூகசேவையாளருமாகிய செங்கைப்புரவோன் உயர்திரு. **இராசையா குவேந்திரநாதன்** அவர்களின் அன்புப்பாரியார்



**திருமதி குவேந்திரநாதன்**

**றஞ்சினிதேவி**

அர்களின் திடீர் மறைவினால் தாங்கொணா துயருற்றிருக்கும் அவரிற்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.04.1963 | 06.09.2025 |

(1521)

**விஸ்ராவிஷன் கலர்லாப், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 06 - 1952 | 06 - 09 - 2025 |



### தில்லையம்பலம் யோகராஜா (சனம்)

யாழ்ப்பாணம் நாவலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் யோகராஜா அவர்கள் நேற்று (06.09.20205) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜசிறி வத்சலா (சலா) அவர்களின் அன்புக் கணவரும் துஷ்யந்தினி, காலஞ்சென்ற கஜேந்திரன்(லக்சன்), கஜமுகன்(டினோ) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகுதாசன், பிரியங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தலையசிங்கம், காலஞ்சென்ற செல்வராசா, சத்தியபாமா, புஸ்பராணி, காலஞ்சென்ற அரியராசா, தெய்வேந்திரராசா, ஆனந்தராசா அவர்களின் அன்புச் சகோதரரும் இராஜேந்திரம், காலஞ்சென்ற இராஜயோகம், இராஜமோகன், இராஜசிறிப்பிரியா(சிறி) ஆகியோரின் மைத்துனரும் சாய்கிர்த்தி, யாறன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

19,உப்புக்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
077 638 8682
076 911 9572

(1524)

## விருந்தினர் விடுதி (HOTEL) விற்பனைக்கு

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில், 7 பரப்புக் காணியில், அமைதியான சூழலில், 15 அறைகள், 2 விசாலமான Hall, Solar Panal உடன் கூடிய ஆடம்பரமான, அழகிய Hotel (விருந்தினர் விடுதி) விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள :

Whatsapp No : + 61416959213

Mobile No : 070 160 2608

(5341)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு **076 636 3378 | 076 097 3127**

## 22 விற்பனைக்கு 22

01. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 68 பரப்பு, 16 பரப்பு காணியும்
02. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் ஆஸ்பத்திரி வீதி முகப்புடன் 10 கடைத் தொகுதியுடன் 16 பரப்புக் காணியும்
03. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 06 பரப்புக் காணியும்
04. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 02 பரப்பில் அமைந்த மாடி வீடும்
05. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறி மார்க்கட்டுக்கு முன்பாக 16 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட அதி நவீன மாடிக்கட்டிடமும்
06. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 03 பரப்பில் அமைந்த 03 கடைகளும்
07. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கஸ்தூரியார் வீதி சந்திக்கு அண்மையில் ஆஸ்பத்திரி றோட் முகப்புடன் 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 03 கடைகளும்
08. யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாக்கும் சாரங்கா நகைக் கடைக்கும் இடையில் 04 கடைகளும்
09. யாழ். ஸ்ரான்லி வீதியில் மின்சார சந்திக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில் 04 கடைகளும்
10. யாழ். சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 150 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட 06 பரப்புக் காணியும்
11. யாழ்.A9 வீதியில் கச்சேரிக்கு அண்மையில் A9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும்
12. யாழ்.நல்லூர் குறொஸ் றோட் வீதியில் 12 பரப்புக் காணியும் 06 பரப்புக் காணியும்
13. யாழ். கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நாவலர் றோட் முகப்புடன் 12 பரப்புக் காணியும்
14. யாழ்.லைடன் கம்பனிக்கு முன்பாக 06 பரப்புக் காணியும்
15. யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
16. யாழ். மின்சார நிலையவீதியில் பழைய தபாற்கந்தோர் வீதிக்கு அண்மையில் 06 பரப்பில் அமைந்த மாடிக் கட்டிடமும்
17. யாழ். மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 02 மாடிக் கடைகளும்
18. யாழ்.மருதனார்மட சந்திக்கு அண்மையில் உடுவில் வீதியில் 10 பரப்புக் காணியும்
19. யாழ். கே.கே.எஸ் வீதியில் தாவடி சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும்
20. யாழ். விக்டோரியா வீதியில் 16 பரப்பு, 12 பரப்பு, 10 பரப்பு காணிகளும்
21. நல்லூர் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதியில் 10 பரப்புக் காணியும்
22. யாழ்.மன்னார் Townக்கு அண்மையில் அதிநவீன அரிசி ஆலையும்
23. யாழ். பிறவுண் வீதியில் 30 அடி அகலமும் 100அடி நீளமும் உள்ள காணித் துண்டு விற்பனைக்குண்டு.

(C-3821)

தொடர்பு : **077 723 2535** கனகசபை தர்மகுலசிங்கம்

183, [illegible] வீதி,
வெள்ளவத்தை.

185, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மணித்தியாலங்களில் 4 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்

(கொழும்பு)

**நாட்டில் கடந்த 12 மணித்தியாலங்களில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற 4 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

மஹாவத்தை, கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் அவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை, பஞ்சிகாவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்நிலையில், நீர் கொழும்பு பகுதியில் ஒரு வீட்டின் மீது அடையாளம் தெரியாத இரண்டு துப்பாக்கிதாரிகளால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட நிலையில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதேவேளை, பாணந்துறை, அலுபோமுல்ல பகுதியில் ஒரு கடையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திய நிலையில் உயிரிழப்புகள் எதுவும் இல்லை. (நி)

# உரிமத் தகடுகள் இன்றி ஒரு லட்சம் வாகனங்கள்

(கொழும்பு)

கடந்த 8 மாதங்களில் இலங்கையில் மொத்தம் ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 586 புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 745 மோட்டார் சைக்கிள்கள் அடங்கும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

வாகன எண் தகடுகள் அச்சிடுதல் பணிகள் ஆறு மாதங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் ஒரு லட்சம் பேருக்கு எண் தகடுகள் கிடைக்கவில்லை.

இந்நிலையில் எண் தகடுகள் அச்சிடும் பணியை தனியார் நிறுவனத்திற்கு தள்ளுபடி செய்து வழங்க திட்டமிட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவிதத்துள்ளது. (நி)

# எல்ல - பேருந்து விபத்து வெளிவந்த உண்மைகள்



(பதுளை)

எல்ல - வெல்லவாய பகுதியில் விபத்துக்குள்ளான பேருந்தானது, கடந்த 2023ஆம் ஆண்டு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் பதிவு நீக்கம் செய்யப்பட்ட பேருந்து என போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

மேலும் விபத்துக்களைக் குறைப்பதற்கு வீதி மேம்பாட்டு ஆணைக்குழு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் விபத்துக்குள்ளான பேருந்தை ஆய்வு செய்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் ஒரு குழுவினர் அப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

மேலும் வீதி பாதுகாப்பு குறித்த திட்டத்தில் இணைக்கப்பட்ட போக்குவரத்து மருத்துவ சபை மற்றும் போக்குவரத்து அமைச்சக அதிகாரிகள் குழுவும் எல்ல பகுதிக்குச் சென்று விபத்துக்குள்ளான பேருந்தை ஆய்வு செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, எல்ல-வெல்லவாய பிரதான வீதியில் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்த கோர பேருந்து விபத்தில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் வரை காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் நிலைமை தற்போது சீராகி வருவதாகவும், அவர்களில் யாருக்கும் உயிருக்கு ஆபத்து இல்லை என்றும் வைத்தியசாலையின் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

THE FUTURE OF IMAGE INDUSTRY
THEVENI ESA 2025
15 ஆவது முறையாக நடடத்தப்படும்
தெவனி எச 2025
இலங்கையின் மிகப் பெரிய
புகைப்பட | வீடியோ | சைன் அச்சிடல் | விளம்பர
வர்த்தகக் கண்காட்சி
செப்டம்பர் 13|14
கொழும்பு 07 BMICH இல்
(C-134)
PRINCIPLE SPONSOR: Softnet Information (Pvt) Ltd, Album Factory Softnet
EXCLUSIVE SPONSOR: digimax THE PHOTO PAPER
PLATINUM SPONSORS: CREATIVE TECHNOLOGIES, LIPI, CREATEMARK
GOLD SPONSOR: ARISSONA, LAKDAM Technologies
SILVER SPONSOR: Debug Digital Centre (Pvt) Ltd., PROTECH DIGITAL SOLUTION
ACADEMIC PARTNER: Image Art
EXIHIBITORS: metropolitan, MEDITECHNOLOGY, AUSTRIYA LARGEST ALBUM MAKERS, SILVER-INN Photo Service, ravindu ADVERTISING SERVICE, E-SCREEN SYSTEMS, BSN TRADERS, RAINBOW MACHINES, Pluss INTERNATIONAL, Lakseya, lanyard.lk, Aruna Ads, TheMagicTouch, Camera Tek, ANURA CAMERA Technics, LEXCO, SHUTTER HOUSE Quality Tech, Better Value, CAMERA SPARES, ABC PROMO materials, APTARA
SUPPORTED BY: UPSSL, SLWPA, fotostar
MEDIA SPONSORS: DAILY MIRROR, THE SUNDAY TIMES, tvG, Capital, Capital NEWS
ORGANIZED BY: THEVENI ESA
077 306 35 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றைய தினம் சனிக்கிழமை பல்லாயிரக்கணக்கான பக்த அடியவர்கள் புடைசூழ பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்- சிவசாந்தன், மகாலிங்கம்)

### புலமைப்பரிசில் பரீட்சை

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# ஜிவேஸ் முதலிடம்




2025 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலய மாணவன் ச.ஜிவேஸ் 175 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவன் கே.பிரநாத் 169 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். (8-316)



துணுக்காய் பிரதேச சபைக்கு உட்பட்ட தேராங்கண்டல் அ.த.க பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களை சமூக சேவை அமைப்பு மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளை நடத்தி வரும் கலைக்களம் அமைப்பினர் அண்மையில் சந்தித்தனர்.

இச் சந்திப்பில் மாணவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் கலைக்களம் சார்பாக பதிலளிக்கப்பட்டதுடன் அங்கு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.



வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத்திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம் - பேராசிரியர்.என்.சண்முகலிங்கன்)



வவுனியாவில் பிள்ளையார் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று குளத்து நீரில் கரைத்து மக்கள் வழிபட்டனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் அதனை முன்னிட்டு இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது. (படம்- வசந்தரூபன்)



யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், செயல் திறன் அரங்க இயக்கம் இணைந்து நடாத்திய குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவு பன்னாட்டு பண்பாட்டு ஆய்வு மாநாடும் நாடக ஆற்றுகைகளும், அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. நிகழ்வில், தமிழ் அரங்கு மற்றும் கலைகளின் சமகால வெளிப்பாடுகள் என்ற தொனிப்பொருளில் மாநாடு நடைபெற்றது. அதனை தொடர்ந்து நாடக ஆற்றுகைகளும் நடைபெற்றது. (படம்-சிவசாந்தன்)



முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் 98 ஆவது பிறந்த நாள் நினைவுப் பேருரை கடந்த ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி யாழ்.பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் உடல்,மன ஆரோக்கியத்தில் சரிவு!

## ஆய்வில் கண்டறிவு

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் கூர்மையான சரிவு கண்டறியப்பட்டுள்ளது**



இலங்கையின் சுகாதார மற்றும் கல்வி அமைச்சுகள், உலக சுகாதார நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திய ஒரு புதிய கூட்டு கணக்கெடுப்பில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

சுமார் 3,000 மாணவர்களை உள்ளடக்கிய மாணவர் சுகாதார கணக்கெடுப்பு, அதிகரித்து வரும் ஊட்டச்சத்து குறைபாடு, உடல் பருமன், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் குறைந்த பழங்கள் மற்றும் காய்கறி நுகர்வு ஆகியவற்றைக் கண்டறிந்தது.

அத்துடன் மனநலக் கவலைகளும், மோசமடைந்துள்ளதாகவும் 22% பேர் தனிமை, 18% பேர் மனச்சோர்வின் அறிகுறிகள் மற்றும் 15% பேர் தற்கொலை பற்றிய சிந்தனைகளை கொண்டிருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன.

நிபுணர்கள் இந்த நெருக்கடியை கல்வி அழுத்தம், வறுமை மற்றும் போதுமான பொது சுகாதார நிதியுதவியுடன் தொடர்புபடுத்துகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தினால் இயக்கப்படும் சிக்கன நடவடிக்கைகள், சிறுவர்களுக்கான ஆதரவு அமைப்புகளை மேலும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர். (நி)

# ரைஸ், கொத்து உள்ளிட்ட உணவுகளின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

ரைஸ், கொத்து, பிரியாணி, முட்டை ரொட்டி உள்ளிட்ட முக்கிய உணவுகளின் விலை ரூ.25ஆல் குறைக்கப்படுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ஹர்ஷன ருக்ஸான் அறிவித்துள்ளார்.

மேலும், அனைத்து வகையான சிற்றுண்டி உணவுகளின் விலைகளும் ரூ.10ஆல் குறைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஹர்ஷனருக்ஸான், இந்த விலைக் குறைப்பு வாடிக்கையாளர்களுக்கு நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்று உணவக உரிமையாளர்களை கேட்டுக் கொண்டார். (நி)


## Invitation for bids (IFB)
## procurment of Repair, Maintenance & service of " Water Treatment Plants" in Teaching Hospital- Jaffna for year 2025/ 2026

1. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for **Repair, Maintenance & Service of "Water Treatment Plants" in Teaching Hospital-Jaffna for Year 2025/2026**

   A. Bidding will be conducted through Nation Competitive Bidding. (Procurement Guideline 2024 is entitled to this Procurement)

   B. To be eligible for contract award the successful bidder shall meet the following requirements:

   a. The bidder shall not have been Black listed by Hospital or other institutes previously

   b. Bidders shall be a reputed company incorporated under Companies Act No.7 of 2007, having experience in planning, engineering, supplying, installing, testing, commissioning and maintenance of similar type system in the role of a contractor, within at least the last five (05) years prior to the Bid Submission Deadline

2. Interested eligible bidders may obtain further information from Accountant, Teaching hospital, Jaffna (Email: acctjaffnath@gmail.com, 0212222261 Ext: 219) and inspect the bidding documents during 09.00 hrs to 15:00 hours on any working day from **2025-September 8 (Monday)**, until **2025-September -22 (Monday).** Bidders are requested to inspect the bidding document prior to purchase and once it is purchased, bidding document fee is not refundable for any reason whatsoever.

3. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Director, Teaching Hospital, Jaffna at the above address during 09.00 am to 16:00 hours on any working day from **2025-September -8 (Monday)**, until **2025-September -22 (Monday)**. upon payment of a non-refundable fee of Sri Lankan Rupees Five Thousand (Rs. 5,000.00). The method of payment will be cash & should be made at the shroff of the Hospital.

4. The bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka in terms of the Public Contract Act No. 03 of 1987 and the Certificate of Registration or payment receipt shall be submitted along with the bid.

5. Bids must be delivered to the address below at or before 10:00 am on **2025-September 23 (Tuesday)** when bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the address below; late bids will be rejected.

6. All bids shall be accompanied by a Bid-Security in favour of the Director Teaching Hospital Jaffna. Acceptable Bid Security details & Bid validity period is as per the Bidding Document.

7. Pre-bid meeting will be held at Conference hall Second Floor Rehabilitation Building Teaching hospital Jaffna commencing at 09.30 hrs on **2025-September -16 (Tuesday)**

.8 The Chairman reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid at any time prior to awarding of a contract without giving any reasons for such. Client is not bound to accept the lowest or any bids. Procurement Committee will not be responsible for any costs or any expenses incurred by the Bidders in connection with the preparation or delivery of Bids

(C-3813)

Chairman
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.



**மணமகன் தேவை**

1988, இந்து, பூரட்டாதி, TEACHER
பூர்வீகம் - கொக்குவில், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11598.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-266)
www.EQMarriageService.com

**மணமகள் தேவை**

1991, இந்து, உத்தரட்டாதி, ENGINEER
பூர்வீகம் -பருத்தித்துறை, வதியுமிடம் -AUSTRALIA
மணமகன் பதிவு இல: 12018.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-266)
www.EQMarriageService.com

**காணி விற்பனைக்கு**

உடுவில் மகளிர் கல்லூரிக்கும், மானிப்பாய் பிரதான வீதிக்கும் மிக அண்மையில் அமைந்துள்ள ஏறத்தாழ 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. காணி வாங்க விரும்புவோர் மட்டும் விற்பனையாளருடன் நேரடித்தொடர்பு கொள்ளவும்.
தொ.இல: 077 726 0194 (C-268)

**மணமகள் தேவை**

யாழ் இந்து 1993 ரோகிணி லக்கினத்தில் குற்றமற்ற செவ்வாய். கிரக பாவம் 62, உயரம் 5 அடி 11 அங் உடைய கொழும்பில் பட்டயக் கணக்காளராக வேலை செய்யும் மகனுக்கு குடாநாட்டைச் சேர்ந்த தொழில் புரியும் மணமகள் தேவை. (C-253)
தொடர்புகளுக்கு: 071 536 0857

**சேவை நலன் பாராட்டு**

திருமதி.
**றஞ்சிதா கனகநாயகம்**

சேவை விபரம்
11.01.1993–02.03.1993
யா/வேலணை மத்திய கல்லூரி

03.03.1995–21.02.2001
யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்

22.02.2001–10.02.2010
யா/தாவடி இ.த.க பாடசாலை

11.02.2010–07.09.2025
யா/இணுவில் மத்திய கல்லூரி



(5327)

ஆசிரியப்பணியில் இன்றுடன் முப்பத்து இரண்டு ஆண்டுகள் ஆரம்பக்கல்வி பாடஆசிரியராகவும், பகுதி தலைவர் ஆகவும் சேவையாற்றி இளைப்பாறும் அவர்தம் அர்பணிப்பான சேவையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்- அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம் யா/இணுவில் மத்திய கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மருத்துவ பரிசோதனை அவசியம்

## மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**35 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆண்டுக்கு 2 தடவைகள் மருத்துவப் பரிசோதனை செய்வது அவசியம் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்றா நோயினைக் கட்டுப்படுத்தல் தொடர்பான மாவட்டச் செயலணி ஸ்தாபித்தல் கூட்டமானது யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரனின் தலைமையில் கடந்த 4 ஆம் திகதி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரனால் பின்வரும் விடயங்கள் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும் ஆரோக்கியமான மேம்பாட்டு அறை இருத்தல் வேண்டும்.

35 வயதினைக் கடந்தவர்கள் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் மருத்துவ பரிசோதனை செய்வது அவசியம். பொதுமக்கள் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் அல்லது சுகாதார நிலையங்களில் மருத்துவ பரிசோதனைகளை மேற் கொண்டு தமக்குரிய தனிப்பட்ட மருத்துவப் புத்தகத்தினைப் பேண முடியும்.

அலுவலகங்கள், நிறுவனங்கள் கேட்கும் பட்சத்தில் இலவச மருத்துவ பரிசோதனைகள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களால் மேற்கொள்ளப்படும்.

அலுவலகங்களில் புகைத்தல் தடைசெய்யப்பட்ட பிரதேசம் என காட்சிப்படுத்தப்பட்ட பலகை இருத்தல் வேண்டும் என்பதுடன் அலுவலகங்களுக்கு வருபவர்கள் வெற்றிலையுடன் (வெற்றிலையினை சாப்பிட்டுக் கொண்டு) வருவதனையும் அனுமதிக்கக் கூடாது.

வீதி விபத்துக்களைத் தடுத்தல் வேண்டும் என்பதுடன், பாதுகாப்பற்ற கிணறுகளால் ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் நீரில் மூழ்கி இறப்பது அதிகரித்துள்ளதால் அது தொடர்பில் முனனெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம் எனவும் ஆபத்தானது என்று அடையாளப்படுத்தல்கள் அல்லது தடுப்புக்கள் அவசியமானது.

கடந்த ஆண்டில் விசர் நாய் கடியினால் ஒருவருக்கு இறப்பு ஏற்பட்டது என்றும் பொது மக்களுக்கு இது தொடர்பிலான விழிப்புணர்வு அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (8)

# திருவாசக முற்றோதலும் மதிப்பளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மட்டுவில் கிராமத்தில் திருவாசக முற்றோதலில் உலக சாதனை படைத்த பெண்களிற்கு கலாம் உலக சாதனைப்புத்தகம் விருது வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு மட்டுவில் கலுவம் சிவன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

வைத்திய கலாநிதி மகேஸ்வரி நன்னித்தம்பி அவர்களால் 2 மணித்தியாலங்கள் 40 நிமிடங்களில் திருவாசகம் பாடி மேற்படி உலக சாதனை படைக்கப்பட்டுள்ள நிலையில் அவருடைய சாதனையைக் கலாம் உலக சாதனைப் புத்தகம் தனது புத்தகத்தில் பதிவு செய்து கலாம் உலக சாதனை விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வசுந்துரா கதிர்காமநாதர் தலைமையில் இடமபெறவுள்ள மேற்படி உலக சாதனை விருது வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-30)

# நினைவு நாளும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம் சாபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக செல்லா மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளதுடன் நினைவுப் பேருரையினை யாழ். பல்கலைக் கழக சந்தைப்படுத்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டிலோஜினி சங்கரதாஸ் வழங்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி. பிரகாஸ், யாழ். மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சு. வரதபாஸ்கரன், யாழ்ப்பாணம் செல்வா ஹாட்வெயார் உரிமையாளர் தோ. கிறிஸ்ரி செல்வராஜன் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி பிர்டவுஸ் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளதுடன் கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திரு முருகன் கலந்து கொள்ளவுள்ளார். (3)

# சோனகத் தெருவில் மீலாத் விழா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் மீலாத் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. இஷா தொழுகையின் பின்னர் சிவலபள்ளி மீலாத் குழுவினரால் மாணவர்களுக்கிடையே கிராத் போட்டிகளும் அறிவுக் களஞ்சியப் போட்டிகளும் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து TOBAZ புட வையகத்தின் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது என கலாபூணம் பரீட் இக்பால் தெரிவித்தார். (3)


# கண்ணீர் அஞ்சலி

யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய
ஆசிரியை திருமதி.இராகினி இராசேஸ்வரன்
அவர்களின் அன்புக் கணவர்

அமரர்.சுப்பிரமணியம்
இராசேஸ்வரன்



தோற்றம்
15.11.1963

மறைவு
06.09.2025

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை
பிரார்த்திப்பதோடு அவர்களின்
குடும்பத்தவர்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(1520)

பாடசாலைச் சமூகம்,
யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.


# செல்வாபுரம் வீதி புனரமைக்க நடவடிக்கை

(கரணவாய்)

கரணவாய் செல்வாபுரம் வீதி கடந்த 10 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டது.

இந் நிலையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் குறித்த வீதியினைப் பார் வையிடளை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதன் போது இவ் வீதியினைப் புனரமைப்புச் செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டது. (8-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“செம்மணி மனிதப் புதைகுழி தமிழினத்தின் மீளமுடியாத பெரும் துயரம்!”

அபிமன்யு

# செம்மணி மனிதப் புதைகுழி

# நாதியற்ற தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுத் தருமா?





செம்மணிச் சித்துப்பாத்தி மயானத்தில் இனங்காணப்பட்ட எலும்புக்கூட்டை ஆதாரமாகக் கொண்டு அங்கு மனிதப் புதைகுழி இருக்கலாம் என நீதிமன்றின் அனுமதியுடன் தோண்டிய போது தமிழினத்துக்கு மட்டுமல்ல உலகிற்கே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை வரலாற்றில் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழி என அடையாளப்படுத்தும் வகையில் செம்மணிப் புதைகுழி பெயரெடுத்து விட்டது. தொடர்ந்து அகழ்வுப் பணிகள் நடைபெறுகின்றதால் இன்னும் உடலங்கள் இருக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளதுடன் இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக செம்மணிப் புதைகுழி அமையும் என்பதில் ஐயம் இல்லை.

செம்மணிப் புதைகுழி விடயத்தில் அரசின் செயற்பாடு நம்பகத்தன்மையுடன் இருப்பதை நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

செம்மணிப் புதைகுழி அகழ்வுகளுக்கான நிதியை அரசு உடனடியாக வழங்கியதுடன் புதைகுழி அகழ்வுக்கான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் செம்மணிப் புதைகுழி விடயத்தில் அரசு மிகுந்த அக்கறையுடன் இருப்பதாகவும் இதற்கான நீதியை நிச்சயம் அரசு பெற்றுத் தரும் எனவும் கூறிவருகிறது.

செம்மணிப் புதைகுழி விவகாரம் உலக அரங்கில் இலங்கையை உற்றுநோக்கும் தன்மையை உருவாக்கியிருக்கிறது.

இவ்வாறான நிலையில் கடந்த 1ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்திருந்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற குடிவரவு, குடியகல்வு திணைக்கள அங்குரார்பண நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதியின் உரையில் ஒரு முக்கியமான விடயத்தைக் கூறியிருந்தார்.

அதாவது, “செம்மணிப் புதைகுழி மிகக் கொடுமையானது. இந்த நாட்டில் மீண்டுமொரு முறை செம்மணிப் புதைகுழிபோல ஒரு புதைகுழி உருவாக எமது அரசு இடமளிக்கப் போவதில்லை” எனப் பேசியிருந்தார் அவர்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் ஜனாதிபதி கூறிய விடயத்தில் மிகப்பெரும் பொறுப்புக்கூறல் இடம்பெற்றிருந்ததை அவதானிக்கலாம். “செம்மணிப் புதைகுழி போல ஒரு புதைகுழி இனி இந்த நாட்டில் உருவாக அரசு இடமளியாது என அவர் கூறியதற்குள் செம்மணிப் புதைகுழி விடயத்தை அரசு ஏற்றுக்கொண்டதாயே பொருள்படும்.

இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தைக் கூறித்தான் ஆக வேண்டும். செம்மணிப் புதைகுழி தொடர்பான செய்திகளை சிங்கள மக்கள் எவ்வாறான கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்பதே அது.

செம்மணியின் அகழ்வின் போது எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிடும் போது அந்தப் பதிவுகளை இழிவுபடுத்துவதாய் சிங்களச் சகோதரர்களின் பதிவுகள் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஒரு இனத்தின் வலியை உணர்ந்துகொள்ளாமல் இவ்வாறு சமூக வலைத்தளங்களில் பதிவிடுவது நிச்சயம் தமிழினத்துக்கு வெறுப்பையே ஏற்படுத்தும் என்பதுடன் அதைத் தமிழினம் ஏற்றுக் கொள்ளாது.

இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் இன முரண்பாட்டை ஏற்படுத்தும் என்பதை சிங்களச் சகோதரர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில் போரினால் தமிழினம் பட்ட வலியும் வேதனையும் சொல்லிலடங்காதவை. தமிழினம் சந்தித்த இழப்புக்கள் வாய்விட்டுக் கூறமுடியாதவை. போர் நிறைவுற்று 16 ஆண்டுகள் கடந்து விட்டன. அவர்களின் மனங்களில் இன்று வரை ஏதோ ஒரு இறுக்க நிலையே இருந்து வருகிறது.

இவ்வாறான நிலையில் எமது சிங்களச் சகோதரர்கள் சிலரின் முரண் பதிவுகள் நிச்சயம் வலியையும் வேதனையையும் தூண்டும்.

இதுவரை செம்மணிப் புதைகுழியில் 240 எலும்புக்கூடுகளுக்கு மேல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

வெறும் 30x50 சதுர அடியில் 240இற்கும் அதிகமான எலும்புக்கூடுகள் என்பது மிகக் கொடுமையானது.

ஆனாலும் செம்மணி மனிதப் புதைகுழியை திசை திருப்பும் வகையில் இன்றுவரை இனவாத அரசியல்வாதிகள் பேசிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

செம்மணிப் புதைகுழி, படுகொலை செய்யப்பட்டவர்களைப் புதைத்த இடமல்ல. அது மயான பூமி.

அங்கு இயற்கையாக இறந்தவர்களை புதைத்திருக்கிறார்கள்.

எனவே அரசாங்கம் இதற்கு தேவையின்றி நிதியை ஒதுக்கக் கூடாது எனக் கூறிவருகின்றார்கள்.

இதுவே ஒரு சிங்களப் பிரதேசத்தில் இவ்வாறானதொரு மனிதப் புதைகுழி இருக்குமாயின், இவர்கள் இவ்வாறு கூறுவார்களா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அகழ்வுப் பணியின் போது 5 எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டன. இதில் ஒரு எலும்புக்கூடு அமர்ந்திருந்த நிலையில் புதைக்கப்பட்டிருந்தது.

இந்துப் பாரம்பரியத்தில் இறந்தவர்களை அமரச் செய்து புதைப்பது வழமையான செயல் என்பதால், குறித்த சந்தேகத்தை நீக்கும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் இந்து கற்கைகள்பீட சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ரமணராஜா அவர்கள் அழைக்கப்பட்டு மேற்குறித்த என்புக்கூட்டை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த விடயத்தை ஆய்வு செய்த அவர். இறந்த ஒருவருக்கு சமாதி அமைப்பதெனின், 5 அடி அகலத்திலும் 9 அடி ஆழத்திலும் குழி தோண்டப்பட்டிருக்கும். குழியின் அடிப்பகுதியில் 3x3 பீடம் அமைந்திருக்கும். அந்தப்பீடம் பலகை அல்லது கல்லாசனமாகவோ இருக்கும்.

உடலின் அடியில் தர்ப்பை, விபூதி, பசுமதாரணம், நவரத்தினம், பஞ்சலோகம் என்பன இடப்பட்டிருக்கும். இவற்றை விளக்கும் முகமாக திருமந்திரத்தில் 1914 ஆவது பாடல் அமைந்துள்ளது.

எனவே செம்மணிப் புதைகுழியில் இருந்து நிலையில் உள்ள என்புக்கூடு இந்து முறைப்படி சமாதி அமைப்பதற்கான அறிகுறிகளைக் காட்டவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

சமாதி அமைப்பு என்றவாறு பார்க்கும்போது அதன் அருகில் படுத்திருந்த நிலையில் வேறு என்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சமாதி அமைப்பில் இவ்வாறான முறைமை இருப்பதற்கு வாய்ப்பு இருக்காது.

செம்மணிப் புதைகுழி விவகாரம் நீதி, நேர்மையுடன் நடப்பதை உணர்த்தி நிற்கிறது. எனவே சம்பவ இடத்தில் நீதிபதி பிரசன்னமாகியிருப்பது அதை மேலும் வலுச்சேர்ப்பதாய் இருக்கிறது.

அல்லல்ப்பட்ட தமிழினத்துக்கு நீதி வேண்டும். அந்நீதியினூடே தமிழினம் தனது பூர்வீக நிலத்தில் ஆக்கிரமிப்பாளர்களின் தொந்தரவில்லாமல் நிம்மதியாக வாழ வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற,அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

பதுளை எல்ல வெல்லவாயவில் நடந்த கோர விபத்தில் 15 பேர் உயிரிழந்த சம்பவம் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுற்றுலாவுக்குச் சென்ற பயணிகளுக்கு ஏற்பட்ட இந்த அனர்த்தம் மனித மனங்களைக் கருக்கியுள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்ம இளைபாற்றலுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** எல்ல வெல்லவாயவில் நடந்த விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் தலா 10 இலட்சம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. உண்மையில் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு மன ஆறுதலைத் தருகின்றது.

உண்மையில் இவ்வாறான இழப்பீட்டுத் தொகையை அறிவித்துள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும்.

**கங்காணி:-**

உண்மை தான் அதேநேரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர, செம்மணிக்குச் சென்று அங்குள்ள மனிதப் புதைகுழிகளை நேரில் பார்வையிட்டிருந்தால் அது தமிழ் மக்களுக்கு சற்று ஆறுதலைத்தந்திருக்கும்.

**மூப்பர்:-** பரவாயில்லை. யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர செம்மணி மனிதப் புதைகுழி குறித்து தனது உரையில் பிரஸ்தாபித்திருந்தமை ஆறுதலைத் தருகிறது.

செம்மணி மனிதப் புதைகுழி போன்ற அவலங்கள் இனி இந்த மண்ணில் இடம்பெறக் கூடாது என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறியதிலிருந்து, செம்மணி மனிதப் புதைகுழி இராணுவத்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்பதை அவர் ஏற்றுள்ளார்.

உண்மையில் அநுர தவிர்ந்த வேறு யார் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும் செம்மணி மனிதப் புதைகுழி தோண்டப்பட்டிருக்கமாட்டாது.


அவ்வாறு தோண்டியிருந்தாலும் அதற்கு வேறு விதமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

தவிர, அதற்குள்ளும் இனவாதம் பேசப்பட்டிருக்கும்.

ஆனால், செம்மணி மனிதப் புதைகுழி தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்பதை அநுரவின் அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அதுமட்டுமன்றி செம்மணி மனிதப் புதைகுழி பற்றிப் பேசுகின்ற அத்தனை அமைச்சர்களும் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் தமிழ் மக்களின் மனதை நோகடிக்கும் வகையில் கதைக்கவில்லை.

மாறாக, நீதி விசாரணை நடத்தப்படும் என்பதை அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அந்த வகையில ஒரு சிறு ஆறுதல் தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ளது.



## போக்குவரத்து நெரிசலால் திண்டாடும் யாழ்ப்பாணம்

**சிறாப்பர்:-** அதுசரி, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அநுரகுமார திசாநாயக்க கச்சதீவுக்குச் சென்று கச்சதீவு எங்களின் சொந்த மண். அதை யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி அநுரவின்ர இந்த உரைக்கு இந்தியாவின்ர எதிர்வினை எப்படியாக இருக்கும்.

**விதானையார்:-** இப்ப இருக்கிற சூழ்நிலையில பிரதமர் மோடி, ஜனாதிபதி அநுரவின்ர உரை தொடர்பில அதிகம் அலட்டிக் கொள்ளமாட்டார்.

**சாத்திரியார்:-** ஏன் விதானையார் அப்படி சொல்லுறியள்.

**விதானையார்:-** சாத்திரியார், இப்ப உலகில மிகவும் செல்வாக்குள்ள தலைவராக இந்தியப் பிரதமர் மோடி விளங்குகிறார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் தன்ர காரில பிரதமர் மோடியை ஏற்றிச் சென்றார் எண்டால், பிரதமர் மோடியின்ர செல்வாக்கு எப்படி இருக்குது எண்டு பார்த்தியள் தானே!

**பண்டிதர்:-** அதெண்டால் உண்மை தான். பிரதமர் மோடியிட்ட இருக்கிற ஆத்ம பலம் தான் அவரை உலகம் வியந்து பார்க்கக் காரணமாக இருக்குது.

அதேநேரம் எதையும் மிகவும் நுட்பமாகக் கையாளுகின்ற கெட்டித்தனமும் துணிவும் பிரதமர் மோடியிட்ட இருப்பதால, கச்சதீவு விவகாரத்தையும் அவர் மிகக் கச்சிதமாகக் கையாளுவார். இவ்வாறு பண்டிதர் கூற,

அந்நேரம் பார்த்து மூப்பர் எழுந்தார்.

என்ன மூப்பர் நேரத்தோட வெளிக்கிட்டாச்சுப் போல கங்காணி கார்த்திகேயன் வினவினார்.

**மூப்பர்:-** கங்காணியார், இப்ப யாழ்ப்பாணம் வாகன நெரிசலில திக்குமுக்காடுது. அதிலும் குறிப்பாக பிறவுண் வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் சந்தியில இருந்து நாவலர் வீதியும் பலாலி வீதியும் சந்திக்கும் இலுப்பையடிச் சந்தி வரையான வீதியில வாகன நெருசல் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வருகின்ற மாணவர்கள். இதற்கும்மேலாக குறித்த இடத்தில இருக்கிற வாகனங்கள் திருத்துமிடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என எங்கும் ஒரே நெருக்கடியாக இருக்குது.

அதிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பமாகின்ற வேளையிலும் நிறைவடைகின்ற நேரத்திலும் குறித்த வீதியில ஏற்படும் சன நெருசல் மற்றும் வாகன நெருசல் சொல்லி மாளா.

ஆகையால இது தொடர்பில சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள்ள கொண்டு வரவேணும் இல்லை எண்டால் குறித்த இடத்தில விபத்துக்கள் நடக்கக் கூடிய ஆபத்துக்கள் ஏற்படத்தான் செய்யும்.


**வாத்தியார்:-** மூப்பர் சொல்லுறது நூறுவீதம் உண்மை. அதோட யாழ்ப்பாணத்தில பல்வேறு இடங்களில போக்குவரத்து நெருசல் ஏற்படத்தான் செய்யுது.

இது விடயத்தில போக்குவரத்துப் பொலிஸாரின்ர சேவை, குறித்த நேரங்களிலாவது இடம்பெற வேண்டும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலவில் மனிதனால் விடப்பட்ட குப்பைகள் கிடக்கிறதாமே. உண்மையா?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்



பெண்கள் பற்றி வியாசரின் கருத்து என்ன என்று அறிந்து கொள்ளலாமா?

**தற்காலத்தில் இலக்கியத்தை நாடுபவர்கள் என்று யாரும் இல்லையே வியாசரே?**

வாஸ்கியன்- யாழ்ப்பாணம்

நளவெண்பாவில் நாலு பாட்டுத் தெரிந்தால் நானும் கவிஞன். மகாபாரதத்தில் இரண்டு காண்டம் தெரிந்தால் நானும் பேச்சாளன். இதிகாசத்தில் இத்துனுண்டு தெரிந்தால் நானும் இலக்கியவாதி.

வெட்டு ஒன்று துண்டு இரண்டாய்ப் பேசத் தெரிந்தால் நானும் பட்டிமண்டபத்தான் வடக்கு வீதியில் வருகிறது. தெற்கு வீதியை நெருக்குகிறது, மேற்கு வீதியை முட்டுகிறது என்று கத்தினால் நானும் பிரசங்கவாதி என்று எண்ணும் சமூகத்தில் இலக்கியத்தை ரசித்து, சுவைத்து கூற ஆளில்லை என்பது உண்மையானது தான்.

**எமது வளங்களைச் சுரண்டி ஏப்பம் விட்டவர்களின் நிலை, அதோகதி போலவே?**

சாயிசெல்வம்- பருத்தித்துறை

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என இவ்விடத்தில் ஆயிரம் முறை பதிவிட்டிருந்தோம். அதன் பிரதி பலிப்பை இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

தவறு செய்தவர்களைத் தண்டிக்க முற்படும் போது அதைத் தடுக்க ஆயிரம் பேர் எழுகின்றனர் என்றால் அந்த ஆயிரம் பேரும் தவறு செய்தவர்கள் என்றே பொருள்.

எங்கள் பணத்தைச் சுரண்டி தங்கள் வயிறு வளர்த்தவர்கள் இப்போது நீதிமன்றப் படி ஏறத் தலைப்பட்டுவிட்டனர்.

இந்த மாற்றத்துக்காகவே தமிழினம் இத்தனை நாள் காத்திருந்தது.

**பெண்கள் பற்றி வியாசரின் கருத்து என்ன என்று அறிந்து கொள்ளலாமா?**

ரிதுஷாளினி- வடமராட்சி

பொம்புளை என்றால் பொறுமை வேணும். அவசரப் படக்கூடாது. அடக்கம் வேணும் ஆத்திரப் படக் கூடாது. அமைதி வேணும் அதிகாரம் பண்ணக் கூடாது. கட்டுப்பாடு வேணும் இப்பிடிக் கத்தக் கூடாது. பய பக்தியா இருக்கணும் இப்பிடி பஜார்த்தனை பண்ணக் கூடாது.

மொத்தத்தில பொம்புள பொம்புளயா இருக்கணும்.

படையப்பா படத்தில் இந்த வசனத்திற்கு விசில் அடித்தவனில் நானும் ஒருத்தன். ஆனால் பெண் என்பவள் உலக உயிர்ப்பிற்கு மூலமானவள். அவள் தெய் வத்திற்கு ஒப்பானவள். பெண் இன்றி இந்தப் பிரபஞ்சமே இல்லை என்பதை இப்போது புரிந்திருக்கின்றேன்.

அந்தப் புரிதலை மனித நேயத்துடன் நேசிக்கின்றேன். அவ்வளவு தான்.

**பணம் வந்தால் பத்தும் மறந்து போகுமா வியாசரே?**


மகாலட்சுமி- கொக்குவில்

ஒரு மனிதனின் சுயரூபம் தெரிய வேண்டும் என்றால் அவனைப் பணக்காரன் ஆக்கிப் பார்த்தால் புரியும்.

பணம் மனிதனை மிருகமாக்கிவிடும். மனிதனிடம் பணமோகம் ஏற்பட்டால் அது மிருகத்திலும் மோசமான செயற்பாட்டை எதிர் கொள்ள நேரிடும்.

ஒன்றைப் பத்தாய், பத்தை நூறாய், நூறை ஆயிரமாய், ஆயிரத்தைக் கோடியாய்ப் பெருக்கவே மனித மனம் துடிக்கும்.

பணமோகம் கொண்ட மனிதனிடம் அன்பு, கருணை, ஈகை எதுவும் இருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு இருந்தால் அது நிச்சயம் ஏதும் கௌரவப் பட்டத்துக்கானதாய் இருக்குமே தவிர வேறு எதுக்குமாக இருக்காது.




**எமது தேசத்தில் அபிவிருத்திப் பணிகள் நடக்கும் போது எம்மவர்களைக் காண வில்லையே?**

ரங்கராஜ்- புதுமடம்

எமக்கு எதையும் எதிர்த்துத் தான் பழக்கம். எதிரில் இருப்பவர் எதைக் கூறினாலும் அதை நாம் எதிர்ப்போம்.

ஏனென்றால் நாம் செய்வது எதிர்ப்பு அரசியல். எமது அரசியலில் இணங்கிப் போவதற்கு வாய்ப்பே இல்லை. நாங்கள் வெளிநாட்டுச் சக்திகளின் கயிற்றை விழுங்கிவிட்டு யார் எது செய்தாலும் அதை எதிர்ப்போம்.

ஏனென்றால் அவ்வாறு எதிர்ப்போம் என்று அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

எமக்கு எமது மக்கள் எப்பாடுபட்டாலும் பரவாயில்லை நாம் மரணிக்கும் வரை எமக்கு பதவி வேண்டும். அது ஒன்றே இருந்தாலே போதும்.

**அரசாங்கத்தை எதிர்க்கும் எதிர்க்கட்சியின் கூட்டு ஒட்டுமா வியாசரே?**

நேசன்- கீரிமலை

தேர்தல் காலங்களில் எதிரியாய் நின்று வசைபாடியவர்கள் எல்லாம் எப்படி ஒன்று சேர்வார்கள் என்று சிந்திக்கும் போது தான் ஒருவிடயம் மின்னலாய்த் தட்டியது.

ஊழலுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது நல்ல விடயம் தானே. ஏன் அதைப் பலர் எதிர்க்கின்றார்கள் என்பதே அது.

அட அப்படியென்றால் நாம் நினைத்தது சரி. அப்படித்தானே?

ஆம், எம் வயிற்றில் அடித்து தம் வங்கிக் கணக்கை நிறைத்தவர்களை நாம் நம்பியிருந்தோம் என்று நினைக்க வெட்கமாக இருக்கிறது.

தெற்கில் அடிக்கும் அலையில் சிறு அலையேனும் வடக்குப் பக்கம் திரும்பினால் இன்னும் மகிழ்வாக இருக்குமல்லவா.

**நிலவில் மனிதனால் விடப்பட்ட குப்பைகள் நிறைந்து கிடக்கிறதாமே. உண்மையா?**

கர்ஷன்- ஒட்டுமடம்

நிலவிற்கு நீல் ஆம்ஸ்ரோங் உள்ளிட்ட குழு சென்ற போது நிலவின் மேற்பரப்பில் இருந்த சில பாறைகள், மண் என்பவற்றை எடுத்து வருவதற்கு விண் ஓடத்தில் இருந்த சில பொருட்களை அங்கு விட்டு வர வேண்டிய தாயிற்று.

ஆயினும் அது குப்பைதான். உலக வரலாற்றில் மனிதனால் வேற்றுக்கிரகத்தில் கால்பதித்த கணத்திலேயே தனது குப்பைக் குணத்தைக் காட்டிவிட்டான் மனிதன்.

பூமியைக் கந்தறுத்துவிட்டோம். அது அழியும் நிலைக்கு வந்துவிட்டது. இப்போது மனிதன் வாழ வேற்றுக்கிரகத்தைத் தேடுகிறான்.

செவ்வாய் கோளை விஞ்ஞானிகள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அங்கு பசுமைக் குடில்களை அமைத்து வாழ்வதற்கான திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

2030 இல் மனிதன் செவ்வாயில் வாழ்வதற்கான சாத்தியப்பாடு இருக்கிறது. அப்படியென்றால் செவ்வாயின் கதியும் அவ்வளவு தான்.

**தமது காரியம் முடிப்பதற்காக அடுத்தவன் காலில் வீழ்பவர்கள் பற்றி?**

ரிதுஷ்- வதிரி

அடுத்தவர் காலில் வீழ்ந்து காரியம் முடிப்பதும் ஒரு திறமைதானே.

இந்தப் பகுதியை வாசிக்கும் போது தனது காரியம் முடிப்பதற்காக அடுத்தவர் காலில் விழக் கூடிய ஒருவர் உங்கள் கண் முன் வருவார்.

ஆம். இதை எழுதும் போது ஒருவர் இருவர் அல்ல ஓராயிரம் பேர் என் கண் முன் வந்து சென்றனர். இதில் என்ன விடயம் என்றால், இப்படிப்பட்டவர்கள்தான் வெளியில் வந்து வடிவேலுவைப் போல பீத்திக் கொள்வார்கள்.

அவர்கள் தங்களை திறமைசாலிகள் என நினைப்பார்களே தவிர அடுத்தவர்களுக்கு அவர்கள் பற்றி எல்லாம் தெரிந்தேயிருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ்.கோட்டை

68

## செங்கை ஆழியான்

இராணுவமும் போராளிகளும் துப்பாக்கிகளால் ஒருவரை ஒருவர் நோக்கிச் சுட்டுத்தள்ளினார்கள். போராளிகளின் கவச வாகனங்கள் கோட்டை மதிலை அண்மிக்குமுன்னரே குண்டு வீச்சு விமானங்களும் இராணுவத்தின் உதவிக்கு வந்துவிட்டன. கொத்தளப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட பீரங்கிக்குண்டுகளும், விமானங்கள் வீசிய ரொக்கட் குண்டுகளும் போராளிகளை குறிவைத்தன.

எங்கும் ஒரே புகை மண்டலம். கடற்கரை வீதியில் நகர்ந்து கொண்டிருந்த வாகனங்கள் (பாரந்தூக்கி) மெதுவாக நகர்ந்தன. பாரந்தூக்கிகள் மூலம் மேலே சென்று மதிலேறப் போராளிகள் தயாராகவிருந்தார்கள். ஆனால், அது சாத்தியப்படாது போனது. கவசவாகனங்களைக் கவச விமானக் குண்டுவீச்சினால், பண்ணைச்சந்திக்கு அருகே வீதியின் நடுவில் ஏற்பட்ட பாரிய குழி ஒன்றினுள், முன்னேறிச் சென்ற சிறிய பாரந்தூக்கி விழுந்து போனது.

அதன் பின்னால் வந்த பெரியபாரந்தூக்கி அதனை இடித்துத்தள்ளியபடி முன்னேறியது. பண்ணைச்சந்திப் பக்கமிருந்த கொத்தளத்தைத் தாண்டி, கோட்டையின் கடற்பக்க நீர்வழி இருக்கும் மதிலை நெருங்கியது. இந்த நீர்வழி கொங்கிறீட் கற்களால் அடைக்கப்பட்டிருந்தது. 16. ஜூன். 1990. நள்ளிரவு வேளையில் இந்த நீர்வழிப்பாதையோடு வெடிமருந்துகளுடன் மோதிய லொறி மதிலைத் தகர்க்க முடியாது போனது. அக்குண்டு வெடிப்பினால் ஏற்பட்டிருந்த மிகப்பெரிய பள்ளம் ஒன்றினுள் இரண்டாவது பெரியபாரந்தூக்கியும் வீழ்ந்துபோனது.

பாரந்தூக்கிகள் மூலம் மதிலேறப் போராளிகள் எண்ணியிருந்தார்கள். அந்தத்திட்டம் கைக்கொள்ளாமல் போனதும், பெரிய தொரு ஏணி மூலம் மதிலேறிக் கோட்டைக்குள் புகத் தீர்மானித்தார்கள்.

பெரிய ஏணியை மதிலோடு சார்த்தி ஏறத் தொடங்கினர். கொத்தளப்பகுதியிலிருந்து துப்பாக்கிச் சன்னங்கள் இவர்களை நோக்கிச் சரமாரியாகப் பாய்ந்தன. மேலிருந்து கைக்குண்டுகள் வீசப்பட்டன. அவற்றால் போராளிகள் காயமடைந்ததுடன் ஏணியும் உடைந்து விழுந்தது. உடைந்த ஏணி பொருத்தப்பட்டு மதிலோடு சார்த்தியபோது ஏணியின் உயரம் மதில் உச்சியை எட்டவில்லை. போராளிகள் சிலர் அருகிலுள்ள அகழிக்கருகிலும், கடற்கரையிலும் நிலையெடுத்து மதில் மேலுள்ள இராணுவத்துடன் போரிட்டுக்கொண்டிருக்க, மதிலின் மேற்பகுதிக்குச் சில அடிகள் கீழே சுவரைப் பிளந்தபடி முளைத்திருந்த அரச மரத்தில் ஏணியை அசையாது பொருத்துவதில் வெற்றி கண்டனர். (தொடரும்...)

# இனிப்பும் கசப்பும்



இரண்டாம்பாகம்

காலத்தின் பதிவு 164

## கடற்புறா

மிகுந்த எச்சரிக்கையுடன் நாம் நடந்து கொள்ளாவிட்டால் இந்த அக்ஷயமுனையைப் பிடித்த நல்ல காலம் இவனுக்குக் குடிப்பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இவனை உறவாடித்தான் கெடுக்க வேண்டும். நீயும் அவனுடன் உறவாடு. அதாவது உறவாடுவது போல் பாசாங்கு செய். அவன் குடிவெறியில் வாயைக் கிளறு. சில உண்மைகளும் கிடைக்கும் என்றான்.

மஞ்சளழகி தன் கறுத்த புருவங்களைச் சற்றே உயர்த்தினாள். கோபத்தாலும், வியப்பாலும், "என்ன சொல்லகிறீர்கள்?" என்று கேட்கவும் செய்தாள்.

அவனுடன் நட்பாயிருப்பது போல் பாசாங்கு செய் என் றான் பலவர்மன்.

பாசாங்கு செய்வது அவசியமல்ல தந்தையே. அவரிடம் என் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறேன். என்றாள் மஞ்சளழகி.

அதுதான் தெரியுமே எனக்கு. ஆம் ஆம். நீங்கள்தானே அவரை எனக்கு மணாளனாக்கவும் இந்த அக்ஷயமுனைக்கு உபதளபதியாக்கவும் தீர்மானித்தீர்கள். அதையெல்லாம் நீ நம்புகிறாயா?" மஞ்சளழகி மேலும் வியப்பைக் காட்டினாள். அப்படியானால் நீங்கள் திட்டமிட்டது.. என்று இழுத்தாள் வியப்புடன்.

திட்டமிட்டதெல்லாம் இளைய பல்லவனை ஒழிக்க! ஆனால் ஒவ்வொரு திட்டத்தையும் அவன் உடைத்து விட்டான். உன்னை மணம் செய்ய ஒப்பமாட்டான் என்று நினைத்தேன் ஒப்பினான். ஸ்ரீவிஜயத்தின் உபதளபதியாக மாட்டானென்று நம்பினேன் அந்த நம்பிக்கையில் மண்ணைப் போட்டு அக்ஷயமுனையைத் தன் வசப்படுத்திக் கொண்டான். அக்ஷயமுனை மக்கள், கொள்ளைக்காரர் அனைவருக்கும் எனது பொக்கிஷத்தைத் திறந்து விட்டு மயக்கியிருக்கிறான். அவன் என்ன குடித்தாலும், என்ன அக்ரமங்களைச் செய்தாலும் பூர் வக் குடிகளிடமிருந்து அவனால்தான் தங்களைக் காப்பாற்ற முடியுமென்று மக்கள் நினைக்கிறார்கள். அந்த நம்பிக்கையை உடைக்க வேண்டும்..." என்று சொல்லிய பலவர்மன், பேச்சை நிறுத்தி மகளைப் பார்த்தான்.

"எப்படி உடைப்பது?" என்று கேட்டாள் மஞ்சளழகி. "உன் உதவி வேண்டும் அதற்கு?" நான் என்ன செய்ய முடியும்? மெல்ல அவன் மனத்தை மாற்றி பகிட்பாரிஸான் காட்டுப் பகுதியிலிருக்கும் அமீரின் காவலை அகற்றிவிடு.


நான் சொன்னால் அவர் செய்வாரா? செய்வதும் செய்யாததும் உன் கையிலிருக்கிறது! என் கையிலா? என்னிடம் என்ன சாதனங்கள் இருக்கின்றன?"

பல இருக்கின்றன. உன் விழிகள், புருவங்கள்..." என்று மேலும் அடுக்கப் போனவனை, "நில்லுங்கள், வெட்கமில்லை உங்களுக்கு?" என்று சீறித் தடுத்த மஞ்சளழகி அவனைச் சுட்டுவிடுவது போல் பார்த்தாள்.

பலவர்மனின் வஞ்சக விழிகள் அவளை அன்புட னும் அனுதாபத்துடனும் பார்த்தன. "மகளே! உன் அழகு இணையற்றது. அதற்குப் படியாத ஆண் மகன் இருக்க முடியாது. அவனுடன் சகஜமாகப் பேசிக் காட்டுப் பகுதியில் உள்ள காவலைச் சிறிது தளர்த்திவிடு. அப்புறம் நடப்பதைப்பார்! இளைய பல்லவனுக்குப் பலவர்மன் இளைத்தவனல்லவென்பது தெரிய வரும். உனக்கு அவனால் எந்தத் தீங்கும் நேரிடாது மகளே! என் ஒற்றர்கள் சதா அவனைக் கண்காணித்து வருகிறார்கள். அவன் அறை வாயிலில் காவல் புரியும் அவனைச் சேர்ந்தவரில் ஒருவனை நம் வசம் இழுத்திருக்கிறேன். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விறகுக் கட்டை வாழ்க்கை!



தாரா நகரம். எதையோ எழுதிக் கொண்டிருந்தார் மகாகவி காளிதாசர். நிழலாடியது. நிமிர்ந்து பார்த்தார். எதிரே ஓர் அந்தணர். தோற்றத்தின் ஒவ்வோர் அங்குலத்திலும் வறுமை. காளிதாசர் எழுந்து அவரை வரவேற்றார். அமரச் சொன்னார். பழச்சாறு கொடுத்தார். அந்தணர் தயக்கத்தோடு விடயத்தைச் சொன்னார். கவியே, நான் வெகுதூரத்திலிருந்து வருகிறேன். வேதம் படித்தவன். வறுமை என் குடும்பத்தை வாட்டுகிறது. போஜராஜனின் உதவி நாடி வந்திருக்கிறேன். உதவுவாரா?

நிச்சயம் உதவுவார். அரசரை வெறுங் கையோடு யாரும் பார்ப்பது இங்கே வழக்கமில்லை. ஏதாவது கொண்டு வந்திருக்கிறீர்களா?

அந்தணர் ஒரு துணிமூட்டையைக் காண்பித்தார். இதில் சில கரும்புத்துண்டுகளைக் கட்டி வைத்திருக்கிறேன். ஒரு விவசாயி தானமாகக் கொடுத்தது. நல்லது. நாளை அரண்மனைக்கு வாருங்கள்.

அந்தணர் விடைபெற்றார். அன்றிரவு அருகிலிருந்த ஒரு சத்திரத்தில் சாப்பிட்டு விட்டுப் படுத்தார். களைப்பில் உறங்கிப் போனார். நள்ளிரவில் சில திருடர்கள் சத்திரத்துக்குள் நுழைந்தார்கள். படுத்திருந்தவர்களிடம் கிடைத்ததைச் சுருட்டினார்கள். அந்தணரிடம் வந்தார்கள். அவரிடம் உருப்படியாக ஒன்றுமில்லை.

அவருடைய மூட்டையைப் பிரித்தார்கள். ஆளுக்கொரு கரும்புத்துண்டை எடுத்துக் கடித்துச் சாப்பிட்டார்கள். பிறகு சத்திரத்து அடுப்படியில் பாதி எரிந்த விறகுக்கட்டைகளை எடுத்து, அந்தணரின் துணியிலேயே முடிந்து வைத்தார்கள். போய்விட்டார்கள்.

விடிந்தது. அந்தணர் எழுந்தார். குளித்தார். மூட்டையை எடுத்துக்கொண்டார். அரண்மனைக்குக் கிளம்பினார். அரசரைப் பேட்டி காணச் செல்வோர் வரிசையில் நின்றார். அவர் முறை வந்தது.

போஜராஜனை வணங்கினார். "மன்னா, இந்த எளியேனின் சிறு காணிக்கையை ஏற்கவேண்டும்" என்னும் போது மூட்டை பிரிந்து, பாதி எரிந்தும் எரியாமலும் இருந்த விறகுக்கட்டைகள் சிதறி விழுந்தன. அதைப் பார்த்ததும் சபையே கொந்தளித்தது.

என்ன ஆணவம். அரசருக்கு இப்படி ஓர் பரிசா? அந்த அந்தணனைக் கொல்லுங்கள் என்று குரல்கள் எழுந்தன. கரும்புத் துண்டுகள், விறகுக்கட்டைகளாக எப்படி மாறின எனத் தெரியாமல் பதறிப் போனார் அந்தணர்.

காளிதாசருக்கு, அது அந்தணரின் தவறல்ல என்று புரிந்தது. சட்டென்று எழுந்தார். கூட்டத்தை அமைதிப்படுத்தினார். அரசே, இந்த விறகுக்கட்டைகளைப் பார்த்தாலே தெரியவில்லையா. இவை பாதி எரிந்தும், பாதி எரியாமலும் இருப்பதைப்போல வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் அல்லாடிக்கொண்டிருக்கிறார் இந்த அந்தணர். அதைக் குறிப்பால் உணர்த்துகின்றன இந்த விறகுக்கட்டைகள். அவர் வறுமையைப் போக்க உதவுங்கள் என்றார்.

மகிழ்ந்துபோன போஜராஜன் அந்தணருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்தான். காளிதாசரின் கூர்மதி அந்தணரைக் காப்பாற்றியது. உஜ்ஜயினி மாகாளிக்கும், காளிதாசருக்கும் மானசிகமாக நன்றி சொன்னபடியே ஊர் திரும்பினார் அந்தணர்.




# தூக்குக் காவடிகள் வீதியில் தேங்காய் அடிப்பது முறையா?

## பேராண்டி...

செல்வச்சந்நிதி கொடியேற்றத்துக்கு உன்ர மாமா தூக்குக் காவடி எடுத்தவரெல்லோ. தூக்குக் காவடி போகின்ற இடங்களில கோயில்கள் இருந்தால் அந்த வீதியிலை தேங்காய் உடைக்கிறதுதானே. அந்தத் தேங்காய் எல்லாத்தையும் எடுத்து ஒரு பையில போட்டு வைச்சு சந்நிதி கோவிலில அதைக் கொடுத்தனி எண்டு கொம்மா சொன்னவள்.

இந்த வயதில இப்படி சமூக சிந்தனையுள்ள பிள்ளை நீ எண்டு நினைக்க எனக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போச்சு.

ஓம், பேராண்டி. கோயில்களுக்கு தூக்குக் காவடி எடுக்கின்ற ஆக்கள் போகின்ற வீதிகளில தேங்காய் அடித்து கற்பூரம் கொழுத்திக் கொண்டுதான் போறவை.

ஆனால் அடிச்ச தேங்காய் வீதியிலை சிதறிக் கிடந்து, போற வாற ஆக்களின்ர காலுக்குள்ள, வாகனங்களுக்குள்ள மிதிபடும்.

என்ன காரணத்துக்காக தேங்காய் அடிக்கிறம் எண்டுறதே தெரியாமல் இப்படி நடந்து கொள்ளுறது கடவுளுக்கும் அடுக்காது.

நேர்த்திக்கடனுக்காக தேங்காய் அடிக்கிறம். தேங்காய்ப் பொச்சு மட்டை எண்டுற சிக்கலான பகுதியை அகற்றி, தேங்காய சிதறுற மாதிரி அடிக்க கடினமான ஓட்டுப்பகுதி (சிரட்டை) உடைய தூய வெண்மையான தேங்காய், பரிசுத்தமான இளநீர் எமக்குத் தென்படுகிறது.

இது வாழ்வின்ர தத்துவம். வாழ்க்கையில கஷ்ரம், துன்பம் வரும். நாங்கள் முயற்சி செய்தால் பரிசுத்தமான தேங்காய், இளநீர் போல எம் வாழ்வும் மலரும் என்பதே அதன் தத்துவம்.

இது தெரியாமல் கடமைக்குத் தேங்காய் அடிக்கிறதில பலன் ஒண்டும் இல்லை.

நேர்த்திக்கடனுக்காக தூக்குக் காவடி எடுக்கிற ஆக்கள் வீதிகளிலை தேங்காய் அடிச்சுப் போட்டு, அதை சேகரிச்சுக் கொண்டு போய் நேர்த்திக்கடன் தீர்க்குற கோயில்களில குடுத்தால், அவை அதை எண்ணெய் ஆக்கி சுவாமிக்கு விளக்கு வைப்பினம். அதிலதான் பலன் இருக்கு.

அதைவிட்டுட்டு இப்பிடி வீதிகளில தேங்காய அடிச்சிட்டு அப்பிடியே விட்டுட்டுப் போனால் அது எத்தின பேருக்கு இடைஞ்சலா இருக்கும்.

இதைவிட இப்ப தேங்காய் விக்கிற விலை தெரியாமல் இப்பிடிச் செய்யிறது முறையில்லையெல்லோ?

ஒரு தேங்காய் 200 ரூபா வரைக்கும் விக்குது. அதோட தென்னைகளில வெள்ளை ஈத்தொற்று ஏற்பட்டு தென்னைகள் அழியிற நிலைக்கு வந்திட்டுது.

இந்த நேரத்தில கடவுளின்ர பெயரால நாங்களே தவறைச் செய்யக்கூடாதல்லோ? இதுகள் அடிப்படையில இருந்து வரவேணும். இல்லாட்டி அது மனிச குலத்துக்கு துன்பத்தைத்தான்தரும்.

ஆச்சி வருவா...

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவங்கள் ஆயிரம்!

## வீட்டு உரிமையாளர்களே... வந்து இருந்து பாருங்கள்!




இங்கு எப்போதும் வாடகைக்கு இருப்பவர்கள் Vs வீட்டு உரிமையாளர்களின் பரஸ்பர குற்றச்சாட்டுகள் இருந்து கொண்டேதான் இருக்கும். அந்தவகையில், இது வாடகைக்கு இருப்பவர்களின் சார்பான ஒரு குற்றச்சாட்டு. என் அனுபவத்தில், வீட்டு உரிமையாளரிடம் வீட்டில் இருக்கும் ஒரு பழுது, குறை பற்றிச் சொன்னால், ஏதோ நாம் தேவையில்லாத செலவு இழுத்துவிடுவதாக நினைக்கின்றனர். எனவே ஹவுஸ் ஓனர்களே...! உங்கள் வீட்டை வாடகைக்கு விடுவதற்கு முன்னர் குறைந்தபட்சம் ஒரு வாரமாவது நீங்கள் அங்கே தங்கிப் பார்த்துவிடுங்கள் அல்லது, வாடகைக்கு இருப்பவர்கள் ஒரு பிரச்சினை பற்றிச் சொன்னால், நேரில் வந்தாவது என்னவென்று பாருங்கள். எங்கள் அவஸ்தை உங்களுக்குப் புரியும்.

## திருமணங்களில் எதற்கு இந்த ஆடம்பரம்?



மிடில் கிளாஸ் நண்பர் ஒருவர் தன் ஒரே மகளின் திருமணத்தை வெகு விமரிசையாக நடத்தினார். நான்கூட, அதற்காக பிரத்தியேகமாகச் சேமித்து வைத்திருப்பார் போல என்று நினைத்தேன். ஆனால், பல ஃபைனான்ஸ் கம்பெனிகளில் இருந்து கடன் வாங்கி அவர் ஆடம்பரம் செய்திருந்தது தெரியவந்த போது அதிர்ச்சியாக இருந்தது.

## பேருந்துப் பயணத்தில் தண்ணீர் பாட்டில்... கூடவே இதுவும்!



பேருந்தில் பயணம் செய்யும்போது, சிலர் கையோடு தண்ணீர் பாட்டில் எடுத்துச் செல்வார்கள் அது பாராட்டுக்குரிய பழக்கம். ஆனால், பயணத்தில் தாகமெடுத்து தண்ணீர் குடிக்க முயற்சி செய்யும்போது பேருந்தின் ஓட்டத்திலும், ஆட்டத்திலும் தண்ணீர் வாய், உடை என்று சிந்தி, கொட்டிவிடும்.

மடியில் மொபைல்போன், முக்கியமான பை என வைத்திருந்தால் அவற்றின் மீதும் தண்ணீர் பட்டுவிடும். அதைவிட ஆபத்தாக, குழந்தைகள், முதியோர்களுக்கு புரையேறி விடலாம். எனவே, பேருந்துப் பயணங்களுக்கு ஸ்ட்ராவுடன் கூடிய பாட்டிலில் தண்ணீர் கொண்டு செல்லும்போது, மேற்சொன்ன சிரமங்களைத் தவிர்க்கலாமே!

# அடுக்களைப் பக்கம்



- வெந்தயக்குழம்பு தயார்செய்து இறக்கும் போது ஒரு டீஸ்பூன் எள்ளுப் பொடியைப் போட்டால் வாசனையாகவும் சுவையாகவும் இருக்கும்.
- மீந்துபோன வாழை, உருளை சிப்ஸை வீணாக்காமல் மிக்ஸியில் கரகரப்பாகப் பொடித்து, பொரியலுக்குத் தூவலாம். மாறுபட்ட சுவையும் மணமும் கிடைக்கும்.
- கோதுமை மாவைச் சலித்தால் வரும் தவிட்டில் தயிரைக் கலந்து உடலில் தேய்த்துக் குளித்தால் வெயிலினால் வரும் எரிச்சல், அரிப்பு ஓடிவிடும்.
- சப்பாத்திக்குத் தேவையான மாவின் அளவு குறைவாக இருந்தால், உருளைக்கிழங்கு அல்லது வள்ளிக்கிழங்கை வேகவைத்து, தோல் நீக்கி மாவுடன் சேர்த்துப் பிசைந்து சப்பாத்தி செய்யலாம். கூடுதல் ருசியுடன் இருக்கும்.
- வேப்பிலைக் கொழுந்தில் வெண்ணெய் மற்றும் மோர் விட்டு அரைத்து தீப்புண் ஏற்பட்ட இடத்தில் தடவிவர எரிச்சல் அடங்கும் புண் எளிதில் குணமாகும்.
- உருளைக்கிழங்கை அரை மணி நேரம் உப்புத் தண்ணீரில் ஊற வைத்துவிட்டு வேகவைத்தால் சீக்கிரம் வெந்துவிடும்.



# மரவள்ளிக் கிழங்கு அல்வா



## சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை :



சர்க்கரை – 150 கிராம்
நெய் – 150 கிராம்
முந்திரி, பாதாம் – தலா 20
ஏலக்காய்த்தூள் – அரை டீஸ்பூன்
உப்பு – ஒரு சிட்டிகை
துருவிய மரவள்ளிக்கிழங்கு – கால் கிலோ



### செய்முறை

அடி கனமான கடாயில் 4 கரண்டி நெய்விட்டு முந்திரி, பாதாம் வறுத்தெடுத்து வைக்கவும். பின் வாணலியில் 4 கரண்டி நெய்விட்டு துருவிய மரவள்ளிக்கிழங்கைச் சேர்த்து நன்கு வதக்கி எடுக்கவும்.

அதே வாணலியில் சர்க்கரையைப் போட்டு, 50 மில்லி தண்ணீர் விட்டு, ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து கம்பிப் பதம் வரும் வரை காய்ச்சவும். பின்பு அதில் வதக்கி வைத்துள்ள மரவள்ளிக்கிழங்கைச் சேர்த்து நன்கு கிளறவும். நெய் பிரிந்து வந்தவுடன் ஏலக்காய்த்தூள், வறுத்த முந்திரி, பாதாம் சேர்த்து கிளறி எடுக்கவும். சுவையான அல்வா தயார்.

**காட்டுப் பயிராக இருந்த மரவள்ளி 10,000 ஆண்டுகளுக்கு உள்ளாகவே வீட்டுப் பயிராக மாற்றம் பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் பொருள் கொடுக்கப் போகிறீர்களா? யாருக்கு என்ன? எதற்கு?





"ஒரு மிகச் சிறந்த பரிசு இதயத்திலிருந்து வரவேண்டும். கடைகளிலிருந்து அல்ல" என்கிறார் சாரா டெசன் என்ற பிரபல அமெரிக்க எழுத்தாளர். "கிஃப்ட்" **(Gift)** என்கின்ற வார்த்தை நம் தினசரிக்குள் வந்துவிட்ட இந்த நாட்களில் பரிசு கொடுப்பவர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய பாடத்தைக் கற்றுக் கொடுக்கிறது இந்த வாசகம்.

அன்பைச் சொல்ல இன்று வார்த்தைகள் மட்டுமே போதுமானதாக இருப்பதில்லை. சிலசமயங்களில், அது பொருளாகவும் பெறுகிறவரின் கண்களுக்குத் தெரியவேண்டியிருக்கிறது. அதிலும் முன்னெப்போதையும் விட இப்போது கொண்டாட்டங்கள் அதிகரித்து விட்டன. பிறந்தநாள் கொண்டாட்டம், திருமணநாள் கொண்டாட்டம், காதலர் தினம், மகளிர் தினம், தொழில்ரீதியான வெற்றிகளுக்கான பார்ட்டிகள், கலாசாரம் சார்ந்த நிகழ்வுகள் எனத் தினந்தோறும் திருவிழா மனநிலையிலேயே நவீன மனம் இருக்கிறது. இதனால் பரிசு கொடுக்கும் வழக்கமும், நிர்ப்பந்தமும் அதிகரித்துவிட்டது.

"அன்பளிப்பு என்கிற வார்த்தையே எல்லாம் சொல்லிவிடுகிறது. நம்முடைய அன்பை ஒரு பொருளின் மூலம் வெளிப்படுத்த நாம் கொடுக்கும் பொருள் உதவி செய்கிறது"

"கொடுப்பவர், பெறுகிறவர் என இரண்டு தரப்புக்குமே பரிசு என்பது மகிழ்ச்சியைத் தரக்கூடிய விடயமாக இருக்கிறது." இதை "அன்பின் மொழி" என்றே சொல்லலாம். ஒருவரது மனதிலிருக்கும் பாசத்தின் வெளிப்பாடு என்றே புரிந்துகொள்ள வேண்டும். பரிசுகளின் மூலம் அன்பையும், மகிழ்ச்சியையும் பரஸ்பரம் இரண்டு தரப்பிலும் பகிர்ந்து கொள்கிறோம்.

ஒருவர் பரிசு கொடுப்பது, அவரிடத்தில் உள்ள அன்பையும், கரிசனத்தையும், நன்றி உணர்வையும் வெளிக்காட்டுகிறது. பரிசு பெற்ற நபருக்கு மகிழ்ச்சியையும், தான் மதிக்கப்படுகிறோம் என்ற உணர்வையும் ஏற்படுத்துகிறது. அந்தவகையில் பரிசுகள் கொடுப்பதன் மூலம் உறவுகள் வலுவடைகின்றன என்றும் சொல்லலாம்.

**குழந்தைகளுக்கு...**

குழந்தைகளுக்குப் பரிசு கொடுக்கும்போது பொதுவாக பொம்மைகள் கொடுக்கிறோம். இதைத் தாண்டி அவர்களின் ஆர்வம் எப்படிப்பட்டது என்பதை அறிந்து செய்ய வேண்டும். விளையாட்டில் ஆர்வம் இருந்தால் அதற்கேற்ற பரிசுகள் கொடுக்க வேண்டும். அவர்களின் கல்விக்கு உதவுவது போலவோ, தினமும் பாடசாலைக்குச் சென்றுவரும் போது உதவுவது போலவோ அமைய வேண்டும்.

**பெண்களுக்கு...**

தனிப்பட்ட முறையில் அக்கறை எடுத்துச் செய்யப்பட்ட கஸ்டமைஸ்டு அன்பளிப்புகள் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும். அந்தப் பரிசைவிட, அதற்காக இவ்வளவு மெனக்கெட்டிருக்கிறேன் என்கிற அக்கறை பெண்களை உருக வைக்கும். மனைவிக்கோ, காதலிக்கோ கொடுப்பதானால் அந்தப் பரிசு அன்பையும், காதல் உணர்வையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். கலைநயம் மிக்க பரிசுகளையும் பெண்கள் அதிகம் விரும்புவார்கள்.

**ஆண்களுக்கு...**

ஆண்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுகள், பத்திரப்படுத்தும்படியாக இருப்பதைவிட, அவர்களுக்கு உபயோகம் அளிப்பது போல இருக்க வேண்டும். அப்படித்தான் விரும்புவார்கள். ஏதோ ஒரு பொருள் வந்தது, அதை ஓரமாக வைக்க வேண்டும் என்ற உணர்வு ஆண்களுக்கு வரக்கூடாது. தினசரி வாழ்வில் பயன்படும் விதமாக அந்தப் பரிசு இருக்க வேண்டும் என்றே ஆண்கள் விரும்புகிறார்கள்.

**மூத்த குடிமக்களுக்கு...**

முதுமையில் இருப்பவர்கள் பெரும்பாலும் தனிமை உணர்வினால் தவிப்பவர்களாக இருப்பார்கள். இந்தத் தனிமை உணர்வைப் போக்கும் விதமாகப் பரிசு இருக்க வேண்டும். "நான் உங்களுடனிருக்கிறேன்" என்று அந்தப் பரிசு உங்களின் இருப்பை அவர்களிடம் சொல்ல வேண்டும். அத்துடன் அவர்களுக்கு ஏதேனும் தேவைப்படுவதாக இருந்தால் அதற்கும் ஏற்பாடாக உங்கள் பரிசு இருக்கலாம். உதாரணமாக, பத்திரிகைகள் படிக்கும் வழக்கம் இருப்பவராக இருந்தால் அதற்கான சந்தாவைக் கட்டலாம்.

இதன் மூலம் ஒவ்வோர் இதழ் அவரைத்தேடி வீடு வருகின்றபோதும் உங்களின் இருத்தலை அவர் உணர்வார்.

# தெளிவே என் சிந்தனையுள்... 26

ஒரு இளைஞனுக்கு ஞானம் பெறுவதற்கு ஆசை வந்தது. குருவிடம் சென்ற அவன் "குருவே எனக்கு ஞானம் பெற வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்" என்றான்.

"தினமும் நான் சொல்லித்தரும் தியானத்தை செய்தால் பத்து வருடங்களில் உனக்கு ஞானம் கிடைக்கும்" என்றார் குரு.

அவனுக்கு சீக்கிரமே ஞானம் பெற ஆசை. ஆதலால் "குருவே தாங்கள் சொல்லித்தரும் விடயத்தை ஒன்றிற்கு இரண்டு முறை செய்தால் எவ்வளவு காலத்தில் ஞானம் கிடைக்கும்" என்றான்.

குரு சிரித்தபடி கூறினார். இருபது வருடங்கள் ஆகும் என்று.

"ஏன் குருவே அதிகம் உழைத்தால் விரைவில் முன்னேறிவிட முடியாதா?" என்றான் அந்த இளைஞன்.

குரு மீண்டும் சிரித்தபடி கூறினார்.

"சிஷ்யா ஒரு மனிதனிடம் எதிர்பார்ப்புகள் அதிகரித்தால் அவன் மனம் அமைதி இழக்கும். ஆதலால், தான்நினைத்ததை அவனால் செய்துவிட முடியாது. முயற்சி சீராகவும் தொடர்ச்சியாகவும் இருக்க வேண்டும். அப்போதே வெற்றி கிடைக்கும்" என்றார் குரு.

**அன்பானவர்களே!**

எம்மில் பலருக்கு இருக்கும் பிரச்சினை இதுவே.

முயற்சி செய்யாமல் கண்மூடி விழிப்பதற்குள் பெரியவர்கள் ஆகிவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இது மிகத் தவறானது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதை

## இலங்கையின் நீடித்த நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சியின் மீதான எதிர்கால சவால்கள்

பகுதி V

இலங்கையின் மீட்சிக்கான பாதை: கடன் மற்றும் ஆளுகை எனும் தொனிப்பொருளில் கடந்த ஜூன் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் இணைந்து முக்கியமானதொரு மாநாட்டினை நடாத்தியிருந்தன. இதில் பல முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தன.

அந்த விடயங்களில் மிக முக்கியமாக பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களை தொகுத்து வழங்கும் நோக்கில் இந்தக் கட்டுரைத் தொகுதி தயாரிக்கப்பட்டது. இது 5 கட்டுரைகளைக் கொண்டிருந்ததுடன் இந்த இறுதிக் கட்டுரை இறுதி அமர்வில் பல முக்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளியல் வல்லுநர்கள் பங்கேற்று இலங்கைப் பொருளாதார வளர்ச்சியினைக் கட்டியெழுப்புவதில் காணப்படும் சவால்கள் மற்றும் முக்கியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை வழிமுறைகளைப் பற்றி மேற்கொண்ட கலந்துரையாடல்களை உள்ளடக்குகின்றது.

இந்த நிகழ்வினை சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் முனைவர் கிரிஷ்ண சிறீனிவாசன் தொகுத்து வழங்கினார். அவற்றின் சாராம்சத்தினை இக்கட்டுரை உள்ளடக்குகின்றது.

உலகளாவிய ரீதியில் தோற்றம் பெற்று வருகின்ற இடர்நேர்வுகள்/சவால்களைப் பற்றிய கருத்துக்கள் ஆரம்பத்தில் பகிரப்பட்டன. இது தொடர்பில் கருத்தினைத் தெரிவித்த கலாநிதி கீதா கோபிநாத், 2025ஆம் ஆண்டானது உலகளாவிய ரீதியில் விதிகளை அடிப்படையாகக் கொண்ட (Rule-based) சர்வதேச வர்த்தக முறைமையிலிருந்து விலகலடைந்து பாரியளவிலான பரிமாண மாற்றத்திற்குட்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.


அமெரிக்காவின் தீர்வை மாற்றங்கள் பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றியும் கலந்துரையாடிய அவர் உலகம் தற்காப்புப் பொருளாதாரம் (Protectionism) நோக்கி நகர்ந்து வருவதாகவும் தீர்வை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தேசிய பாதுகாப்பு பற்றிய கரிசனைகள் முன்னிலை வகிப்பதாகவும் தெரிவித்தார்.

இத்தகைய மாற்றங்களும் கரிசனைகளும் உலக வர்த்தகப் போக்கினையும் (Direction) வர்த்தக இணைப்புக்களையும் (Integration) மாற்றியமைக்கக்கூடுமெனத் தெரிவித்தார்.

இதுவும் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் வலுவடைந்துவரும் புவிசார் அரசியல் பொருளாதார பிரச்சனைகளும் உலகளாவிய ரீதியிலான அதிகரித்த நிச்சய மற்றதன்மைகளை உருவாக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான போக்குகள் மீது அனைத்து நாடுகளிலும் தாக்கத்தைச் செலுத்த முடியும்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அவர்கள் கடந்த இரு ஆண்டுகளிற்கு முன்னர் இலங்கை எதிர்நோக்கிய மிகச் சிக்கலான பொருளாதார பிரச்சனைகளிற்கான காரணங்கள்,

அதிலிருந்தான மீட்சியடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் பற்றிக் குறிப்பிட்டதுடன் இதுவரை மீட்டெடுக்கப்பட்ட பொருளாதாரத்தைத் தக்கவைப்பதற்குச் செய்ய வேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.




**எதிர்பாராத உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான பொருளாதார தாங்கியிருப்புக்களை (Buffers) போதியளவு கட்டியெழுப்பாமையினாலும் தொடர்ந்து பேணிக் கொள்ளாமையினாலும் இலங்கை கொவிட்-19 காலத்திலும் பொருளாதார நெருக்கடிக் காலத்திலும் எதிர்நோக்கிய பிரச்சனைகள் இலங்கைக்கு ஒரு படிப்பினையாக அமைந்தது.**

அதேபோல, தற்போதைய உலகச் சூழலும் மிகவும் பாதகமாகவும் நிச்சயமற்றதாகவும் காணப்படுவதனால் இலங்கைப் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்குந் தன்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அனைத்து வழிகளிலும் தாங்கியிருப்புக்கள் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

தற்போதைய நிச்சயமற்ற சூழலில் முதலீடுகளைக் கவர்வதில், முக்கியமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் (FDI) கவர்வதில், பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதனால் வெளிநாட்டுத் துறையிலே குறிப்பாக சென்மதி நிலுவையில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மிகையினைப் பேணுவதனூடாக உள்நாட்டு சேமிப்பு மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதும், அதிகளவில் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதும், இறைத் துறையிலும் வரவு செலவுத்திட்ட ஆரம்ப மிகையினைப் பேணுவதும் அவசியமெனக் கூறினார்.

அதுமாத்திர மன்றி, மத்திய வங்கியின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற விடயங்களான நாணயக் கொள்கை மற்றும் நிதியியல் துறை உறுதிப்பாடு தொடர்பிலும் தாங்கியிருப்புக்கள் பேணப்பட வேண்டியிருப்பதை வலியுறுத்தினார். இவற்றிற்குத் தேவையான கட்டமைப்புக்கள் தற்பொழுது உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அதனைப் பயன்படுத்தி உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை தன்னை மேலும் தயார்படுத்த வேண்டுமென்றும் அவர் கூறினார், தேவையான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி குமாரசுவாமி இலங்கையில் தற்பொழுது பின்வரும் 5 அம்சங்களை உள்ளடக்கிய முக்கிய பொருளாதார நிலைமாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

(1) பொது நிதி முகாமைத்துவமும் இறை விதிகளும் சட்டவாக்கங்களின் மூலம் மேம்படுத்தப்பட்டமை.

(2) மத்திய வங்கிச் சட்டமும் அதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மை பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் ஆளுகை.



கலாநிதி.சுஜீதா ஜெகஜீவன்.
பணிப்பாளர்.பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

(3) பொதுப் படுகடனின் அனைத்துப் பகுதிகளையும் ஒன்றாக முகாமைப்படுத்துவதற்கு வசதிசெய்யும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமும் மத்திய வங்கியிலிருந்து அந்தப்பொறுப்பு நீக்கப்படுகின்றமையும்.

(4) அரச நிதி மற்றும் வங்கித் தொழில் முறைமையிலும் காணப்பட்ட நிதியியல் சுமையினைக் குறைக்கச் செய்த எரிபொருள் மற்றும் வலு என்பவற்றிற்கான அடிப்படையாகக் கொண்ட விலையிடல் முறைமை.

(5) இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஆளுகை மேம்படுத்துவதற்காக செய்யப்பட்ட சட்ட ரீதியான முன்னேற்றங்களும் கொள்கை முன்னெடுப்புக்களும்.

பொருத்தமான ஆளணிகள் மற்றும் வல்லுநர்களால் இவை முன்னெடுத்துச் செல்லப்படும் போது இன்னொரு முறை உள்நாட்டிலே உருவாக்கப்பட்ட பொருளாதார நெருக்கடிக்கான (Home-grown crisis) சாத்தியங்கள்

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: படித்தால் மட்டும் போதுமா
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடகர்கள்: பி.பி.ஸ்ரீனிவாஸ், டி.எம்.சௌந்தரராஜன்
வரிகள்: கண்ணதாசன்



பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏன்னென்று நான் சொல்ல வேண்டுமா

பூ ஒன்று கண்டேன் முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்ல வேண்டுமா

நடமாடும் மேகம் நவநாகரீகம்
அலங்காரக் கின்னம் அலை போல மின்னும்
நடமாடும் செல்வம் பனிவான தெய்வம்
பழங்கால சின்னம் உயிராக மின்னும்

துள்ளி வரும் வெள்ளி நிலா
துள்ளி வரும் வெள்ளி நிலா
துவண்டு விழும் கொடியிடையாள்
துவண்டு விழும் கொடியிடையாள்
விண்ணோடு விளையாடும்
பெண் அந்த பெண்ணல்லவோ
சென்றேன் அங்கே கண்டேன் வந்தேன்

பெண் ஒன்று கண்டேன் பொன் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏன்னென்று நான் சொல்ல வேண்டுமா

நான் பார்த்த பெண்ணை நீ பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்கவில்லை

உன் பார்வை போலே என் பார்வை இல்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை

என் விழியில் நீ இருந்தாய்
என் விழியில் நீ இருந்தாய்
உன் விழியில் நான் இருந்தேன்
உன் வடிவில் நான் இருந்தேன்

நீயின்றி நான் இல்லை நானின்றி நீ இல்லையே
சென்றேன் கண்டேன் வந்தேன்

பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏன்னென்று நான் சொல்ல வேண்டுமா

பூ ஒன்று கண்டேன் முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்ல வேண்டுமா

(14 ஆம் பக்க தொடர்ச்சி...)

அரிதாகவிருக்குமென அவர் வலியுறுத்தினார்.

**தற்போது அடையப்பட்டுள்ள பொருளாதார உறுதியினை தக்கவைத்துக் கொள்வதற்கும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்வதற்கும் இலங்கை செய்ய வேண்டியவை.**

அமர்வில் கலந்துகொண்ட பொருளியல் வல்லுநர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அவற்றின் சாராம்சம் பின்வருமாறு:

(1) ஏற்கனவே அடையப்பட்டிருக்கின்ற பொருளாதார மீட்சியுடன் மாத்திரம் திருப்தியடையாமல் இருப்பதும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களிலிருந்து பின்வாங்காமல் இருப்பதும்.

(2) பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள எஞ்சியுள்ள பொருளாதார சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தலும். இதற்கு முக்கியமாக டிஜிட்டல் மயப்படுத்தல். வியாபாரம் செய்வதற்கான சூழலை மேம்படுத்தல், மனித வளத்திறனில் காணப்படுகின்ற குறைபாடுகளை நடுத்தர கால அடிப்படையில் தீர்த்தலும்.

(3) வர்த்தகத் தொடர்புகளைப் புதுப்பித்துக் கொள்ளலும் விரிவுபடுத்திக் கொள்ளலும். இதில் முக்கியமாக பிராந்திய ரீதியிலான அதிகரித்த வர்த்தக ஒருங்கிணைப்பு முக்கியமானது.

(4) முதலீடுகளை, குறிப்பாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைத், தூண்டுதலும் அதற்குச் சாதகமான உள்நாட்டுச் சூழலினை உருவாக்குதலும். இதில் வியாபாரம் செய்யும் சூழலை மேம்படுத்தல், புதிய வியாபாரங்களைத் தொடங்குவதற்குத் தேவையான செயன்முறைகளை ஒருமுகப்படுத்துதலும் இலஞ்ச ஊழலினை ஒழித்தலும் முக்கியமாகவிருக்கும்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கலாநிதி கோபிநாத் முதலீட்டினைத் தூண்டுவதற்கான சலுகைகளை வழங்கும் போது தனிப்பட்ட சில வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவரை இலக்கிடுவதிலிருந்து விலகி ஒட்டுமொத்த வியாபார சூழலை மேம்படுத்துவதற்கான கிடையான கொள்கைகளை (Horizontal polices) அறிமுகப்படுத்துவது முதலீடுகளைத் தூண்டி அதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கு மென குறிப்பிட்டார்.

(5) உறுதியானதும் சுயாதீனமானதுமான நிறுவனங்களை உருவாக்குவதலும் அவற்றின் வினைத்திறனையும் ஆளுகையையும் மேம்படுத்தலும்.

இலங்கை போன்று மிக மோசமான பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்த சில நாடுகள் தொடர்ச்சியானதும் அர்ப்பணிப்புடனானதுமான பொருளாதாரச் சீர்திருத்தப் பாதையில் பயணித்து எவ்வாறு மீண்டும் மீண்டும் பொருளாதார உறுதியற்ற நிலைக்கு தள்ளப்படுவதைத் தவிர்த்துக் கொண்டன என்பது தொடர்பான விடயங்களும் கலந்தாலோசிக்கப்பட்டன. இதில் முக்கியமாக ஜமேக்கா, சைப்பிரஸ், உருகுவே போன்ற சில நாடுகள் கலாநிதி கோபிநாத்தினால் சுட்டிக்காட்டப்பட்டன. ஜமேக்காவின் நிரந்தரமான பொருளாதார மீட்சியும் உறுதியும் ஒரு வெற்றிகரமான முன்னுதாரணமாகக் குறிப்பிடப்பட்டது. உதாரணமாக தொடர்ச்சியான சர்வதேச நாணய நிதிய வசதிகள் மற்றும் பொதுப் படுகடன் மறுசீரமைப்பினைத் தொடர்ந்து, தொடர்ச்சியாக ஆறு வருடங்களாக வரவு செலவுத்திட்டத்தின் ஆரம்ப மிகையினை (அரச வருவாய்க்கும் வட்டி தவிர்ந்த ஏனைய செலவுக் குமிடையிலான வேறுபாடு) மொ.உ.உற்பத்தியின் 7 சதவீதத்திற்கு பேணியதனூடாக நாடு பொதுக் கடனினை மொ.உ.உற்பத்தியின் 150 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாகக் குறைக்கக்கூடிதாகவிருந்தது.

எனவே, தொடர்ச்சியாக பல ஆண்டுகளாகத் தொடர்கின்ற பொருளாதார சீர்திருத்தங்களிற்கான பாதையும் அரசியல் மாற்றங்களிற்கு மத்தியிலும் தொடர்ந்த பொருளாதார சீர்திருத்தங்களிற்கான அர்ப்பணிப்பானது சிறந்த பொருளாதார மாற்றத்தினை அந்த நாட்டில் உருவாக்கியுள்ளது. இது போன்றதொரு பல ஆண்டுகளுக்குத் தொடர்கின்ற பொருளாதார நிலைமாற்றம் இலங்கைக்கும் இன்றியமையாததாகவிருக்கும்.

இறுதியாக, ஒரு நாடு மிக மோசமான பொருளாதாரப் பிரச்சனைக்கு உட்படுகின்ற காலத்தில் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதும் நிறைவேற்றுவதும் ஒப்பீட்டளவில் இலகுவாகவிருக்கும். பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இலங்கையில் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட சிக்கலான சீர்திருத்தங்களின் விரைவான நடைமுறைப்படுத்தலும் இதற்கு உதாரணமாகும். இருந்தபோதிலும், தற்பொழுது ஓரளவிற்கு பொருளாதார உறுதி எட்டப்பட்ட பின்பும் பொருளாதார மீட்சி அடையப்பட்ட பின்பும் இந்தச் சீர்திருத்தக் கடப்பாடுகளிலிருந்து சிறிது சிறிதாக விலகுவதற்கானதும் தாமதிப்பதற்குமான சாத்தியங்கள் அதிகம்.

அவ்வாறான நடைமுறையே கடந்த 16 சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களின் போதும் ஏனைய சீர்திருத்த முயற்சிகளின் போதும் இலங்கையில் பெருமளவில் அவதானிக்கப்பட்டது. அதன் விளைவும் தற்போது முழுமையாக உணரப்பட்டமையினால் இலங்கை மீண்டுமொரு நச்சு சுழற்சிக்குள் தன்னை உட்படுத்திக்கொள்ளக் கூடாது.

இதற்காக, சீர்திருத்தத்திற்கான தேவைகள் பற்றி அனைவருக்கும் அறிவுறுத்த வேண்டியுள்ளதுடன் நாட்டின் அனைவரையும் உள்ளடக்கக்கூடியதான கலந்தாலோசனைப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். பொதுமக்களினதும் ஏனைய பங்கேற்பாளர்களினதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதன்மையை உருவாக்கிக் கொள்வது (Social compact) சீர்திருத்தங்களின் உரிமையினை அனைவரும் கையிலெடுப்பதற்கு வழிசமைத்து இவை விரைவாக நடை முறைப் படுத்தப்படுவதற்கும் வழிவகுக்கும்.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் பின்னர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிக்கப்பட வேண்டுமென்பது தொடர்பாகவும் அதற்கான விரைவான கொள்கை முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது தொடர்பாகவும் ஏகோபித்த அபிமானமும் ஏற்றுக்கொள்ளுந்தன்மையும் அனைவரிடமும் காணப்படுகின்றது.**

**இதேபோன்று ஏனைய முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பிலும் அனைவரதும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதும் அரசியல் வேறுபாடுகளின்றியும் அரசியல் மாற்றங்களிற்கு அப்பாலும் இவ்வாறான கொள்கைகள் தொடரப்படுவதும் அவசியம். இவ்வாறானதொரு நிலைமை உருவாக்கப்படுமானால் இலங்கை மீண்டுமொரு முறை சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டத்தினை நாடி நிற்பதற்கும் மீண்டுமொருமுறை பொதுப் படுகடன் மறுசீரமைப்பினை மேற் கொள்வதற்கும் தேவையேற்படாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்

நேற்று ஒரு நிகழ்வு. காலை சுமார் 9.30 மணி. தெரு ஓரமாக வாகனத்தை நிறுத்திவிட்டு, Stationery பொருட்கள் வாங்கிக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு பெரியவரும் ரோடை Cross செய்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்திருக்கிறேன். தர்பூசணியை வண்டியில் வைத்து கூறு போட்டு விற்பவர். அருகில் அவர் மனைவி அமர்ந்திருந்தார். மனைவிக்கும் தனக்கும் காலை உணவு எதிரிலிருக்கும் சிறு ஹோட்டலில் வாங்கிக்கொண்டு வந்து கொண்டிருந்தார். அவர் நடுரோட்டில் வந்து கொண்டிருந்த போது, ஒரு ஸ்கூட்டர் வேகமாக வந்து அவரருகில் சடாரென்று பிரேக் போட்டு நின்றது.

ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு வந்தது இளம்பெண். கோபத்தோடு முகம் சிவக்க, அந்த பெரியவரை கடுமையான சொற்களால் திட்டிவிட்டு, வேகமாக சென்று விட்டார். என்னதான் தவறு அந்தப் பெரியவர் மீது இருந்தாலும், அவ்வளவு மரியாதை குறைவாக அந்தப் பெண் திட்டி இருக்க வேண்டியதில்லை. ஸ்கூட்டர், அருகில் வந்து சட்டென்று நின்ற அதிர்ச்சியில், அவர் வாங்கி வந்த உணவுப் பொட்டலமும் கீழே விழுந்து விட்டது. முகத்தில் வருத்தத்துடன், உணவு பொட்டலங்களை குனிந்து எடுத்துக்கொண்டு தன் கடையை நோக்கி சென்றார்.

இன்று அதே நேரத்தில், அதே பெண் தூரத்தில் ஸ்கூட்டரில் வருவதை பார்த்ததும், "ஒரு நிமிடம் சார்" என்று என்னிடம் கூறிவிட்டு வந்து கொண்டிருந்த பெண்ணை நிறுத்தச் சொல்லி கையசைத்தார்.

அந்த இளம் பெண்ணும் முகத்தில் சற்று கலவரத்தோடு, நேற்று திட்டியதற்கு சண்டை போடப்போகிறாரே? என்று வண்டியை நிறுத்திவிட்டு, "என்ன?" என்று கோபமாக கேட்டாள்.

"தாயி, நேற்று போகும் அவசரத்தில் இதை தவறவிட்டு விட்டு போய்விட்டாய்" என்று விலையுயர்ந்த செல்போனை தன் மடியில் இருந்து எடுத்துக் கொடுத்தார்.

அந்த இளம்பெண்ணுக்கு பேச்சே வரவில்லை. வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு "ஐயா இந்தச் செல்போனை தொலைத்ததில் இருந்து நிம்மதியே இல்லை.

மிக்க நன்றி" என்று கூறிவிட்டு கண் கலங்கினார். நேற்று அவ்வளவு அவமரியாதையாக பேசி இருக்கக்கூடாது. Work Tension. என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசிவிட்டேன்" என்று கைகூப்பினாள்".

"அட விடு தாயி. எல்லாருக்கும் கோபம் வருவதுதான். இதைப்போய் பெரிது படுத்திக்கொண்டு. ஜாக்கிரதையாக போ தாயி" என்று அன்போடு அனுப்பி வைத்தார்.

"நேற்று அப்படி திட்டிய பெண்ணை, நாலு வார்த்தை கேட்டிருக்கலாமே" என்றேன்.

"சின்னப் பெண் சார். இன்னும் கல்யாணம், காட்சி, குழந்தை என்று ஆலவிருட்சமாக வாழவேண்டிய பெண் சார்.

வயதாகி பக்குவம் வந்தால் எல்லாம் சரியாகிவிடும். எனக்கு பேத்தி வயது. என் பேத்தியாக இருந்தால் சண்டை போடுவேனா? நல்லா இருக்கட்டும் சார் என்றார்.

என்னால் பேசவே முடியவில்லை. அசந்து விட்டேன். நம்மை சுற்றி எத்தனை நடமாடும் ஞானக்குருக்கள்.



# கவிதைக் கலசம்

## எலும்புக் கூடு



அன்று நான்
குற்றுயிராக இருந்தேன்
என் மீது மண் விழுகிறது
பேச முடியவில்லை
கண்ணீர் விட்டேன்
பூமியை நனைத்தேன்
மண்ணுக்குள் உறங்கிவிட்டேன்
உறைந்தே விட்டேன்

இன்று நான் வெளியே
கொண்டு வரப்படுகிறேன்
காட்சிப் பொருளாகி விட்டேன்!
பேசு பொருளும் ஆகிவிட்டேன்!
முன்பு மருத்துவக் கல்லூரியில்
காட்சிப் பொருளானேன்!
இன்று நான் விசாரணைப்
பொருளாகி விட்டேன்!

நான் யார் என்று எனக்கே
தெரியவில்லை! புரியவில்லை!
ஆனால் காலம் பதில் சொல்லும்!

**திருமதி.தவமணிதேவி கணேசலிங்கம்**
**மூதாளர் அன்பு இல்லம்,**
**சிவபுரவளாகம், முகமாலை**

## பாக்கு நீரிணையே பகையானாய் தமிழருக்கே!



ஆழக் கடல் தாண்டி
எட்டுத் திக்கும் சென்று
வெற்றித் திலகமிட்ட
சோழர் பரம்பரை நாம்!

கொள்ளையிடவே வந்த
வெள்ளையர் தந்து போன
புதிய எல்லைகளால்
புகழ் மங்கிக் கிடக்கிறோம்!


பெரும்பான்மைக் கரங்களிலே
அதிகாரம் போய் குவிய
குதறப்படும் இனமாய்
குருதியினை சிந்துகிறோம்!

அந்நியன் வகுத்து விட்ட
அதிகாரச் சுவர் தகரின்
தொல்லைகள் விலகிவிடும்!
தமிழின் தகைமை வெல்லும்!

**கவிஞர் இரா.ஜெயக்குமார்**
**யாழ்ப்பாணம்**

## சாவடம் சரணாகதியடம்

நான் சாக மாட்டேன் ஏனெனில்
நான் உயிரோடிருக்கும் போதே
சாகடித்து விட்டார்கள்
வாழவும் பிடிக்கவில்லை காரணம்
வரலாறு பிடித்துக் கொண்டது
ஊமைகள் உசாராகும் வரை
உண்மைகள் உறங்கவே செய்யும்
பிறப்பும் இறப்பும் மாறாது
மாற்றம் ஒன்றே மாறும் வாழ்வில்
அம்மணிக் காலத்தில் செம்மணியில்
புதைத்த பொன்மணியும் சாகாது
சாவிலே சரித்திரம் படைத்த மண்ணில்
தரித்திரம் தரித்திருப்பதே சாபக்கேடு
உடல் அழிவே சாவின் உறுதிப்பாடல்ல
உணர்வழிப்பும் சாவின் தொடர்ச்சியே
சாவையே சாகடிக்கும் சகபாடிகளின்
சரணாகதி வாழ்வை சாகடிப்போம்



**மாவையூர்க்கவி**
**பா.இரமணாகரன்**


அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா

# சின்னத்திரை டைரி

## சுபிக்ஷா



**ரி.வி:** அதுதான் என்னைப் பிரபலமாக்கியது. அனுதினமும் மக்களிடம் என்னைக் கொண்டுபோய் நிறுத்தியது. ஐ லவ் டெலிவிஷன்!
**சினிமா:** ரி.வி ஆர்ட்டிஸ்ட் அங்கு போனால் என்னென்ன சிரமங்களை அனுபவிப்பார்கள் என்று கேள்விப்பட்ட போது, நாமெல்லாம் போக முடியுமா என்று யோசித்தேன். இப்போது சின்னதாக நம்பிக்கை வந்து விட்டது. "ஃபேமிலி படம்" ரிலீசாகி நல்ல பெயர் வாங்கித் தந்தது. யோகிபாபு சேர் ஜோடியாக ஒரு படத்தில் நடித்திருக்கிறேன். அதனால் இப்போது பயம் போய் விட்டது எனக்கு.
**பொழுதுபோக்கு:** பாட்டு கேட்பேன்.
**சமீபத்திய மகிழ்ச்சி:** இலங்கையில் முதல் திருமண நாளைக் கொண்டாடியது. போன ஆகஸ்ட் இல் தான் கல்யாணம். ஒரு வருடம் எப்படிப் போனது என்றே தெரியவில்லை. வாழ்க்கை வேகமாக போய்க் கொண்டிருக்கு.
**மறக்க நினைப்பது:** கடந்துபோன நாட்களை நினைத்துக் கொண்டிருக்கிறதை நேரவிரயம் என்று நினைக்கின்றவள் நான்.
**எரிச்சல் உண்டாக்கும் வார்த்தை:** ரி.வி நடிகைதானே என்று யாராவது சொன்னால் எரிச்சல் வரும். சினிமா, சீரியல் இரண்டுமே நடிப்புதானே?



**சந்தானத்தின்** "குலுகுலு"வில் நடித்த நமீதா கிருஷ்ணமூர்த்தி,குணச் சித்திரத்தில் நெகிழ வைத்தார். அதன் பிறகு கீர்த்தி சுரேஷ் கதை நாயகியாக நடிக்கும் "கண்ணி வெடி"யில் கமிட் ஆனார். இப்போது கே.பி.வை.பாலா ஹீரோவாக அடியெடுத்து வைக்கும் "காந்தி கண்ணாடி" படத்தில் இடம்பிடித் துள்ளார். "நடிப்புக்கு ஸ்கோப் உள்ள ரோல் கிடைத்திருப்பது சந்தோஷமாக இருக்கிறது" எனச் சிலாகிக்கிறார் நமீதா.



**"பருத்திவீரன்"** சரவணன் நடிப்பில் சமீ பத்தில் வெளியாகியிருக்கும் "சட்டமும் நீதியும்" வெப் தொடர், வரவேற்பை அள்ளிவருகிறது. இந்நிலையில், சொந்த ஊரில் அசத்த லான விடயம் ஒன்றைச் செய்திருக்கி றார். சேலம் அருகே உள்ள வட்டக்காடு என்ற, தனது பிறந்த ஊரில், அனைத்து வசதிகளையும் கொண்ட "சரவணன் ஸ்டூடியோ பிலிம் பேக்டரி"என்ற பெயரில் ஸ்டூடியோ ஒன்றை யும் அதன் அருகே அழ கான விநாயகர் கோயிலையும் கட்டியிருக்கிறார்.

# சொல்லவே இல்ல... ஹரிகா

**"ம**ணமகளே **வா"** சீரியல் ஹரிகாவுக் குத் திருமணம் ஆகிவிட்டதாம். ஆனால் இந்தத் தகவல் அவருடன் சீரியலில் நடிக் கும் நடிகை லக்ஷ்மிக்கு முதலில் தெரியாதாம். தன் மகனுக்குப் பெண் பார்க்கத் தொடங்கியிருக்கும் அவர், "பார்க்க அழகான சின்னப் பெண்ணாக இருக்காங்களே, இவங்களைக் கேட்டுப் பார்க்க லாம்" என நினைத் திருக்கிறார். ஒரு கட்டத்தில் திரு மணமானவர் என்கிற விட யம் தெரியவர ஏமாற்றமாகி விட்டதாம் லக்ஷ் மிக்கு. அதன் பிறகு ஹரிகாவி டம் நேரடி யாகவே விடயத்தைச் சொல்லிச் சிரித்திருக்கி றார்.






**"மிஸ்டர் ஜூகீப் பர்"** படத்தை அடுத்து "அழகர் யானை" என்ற படத்தில் கதை நாயகன் ஆகியிருக்கிறார் புகழ். "மரகதக்காடு" படத்தை இயக்கிய மங்களேஸ்வரன் இயக்குகிறார். எம்.ஜி.ஆரின் "நல்ல நேரம்", ரஜினிகாந்தின் "அன்னை ஓர் ஆலயம்", கமலின் "ராம் லட்சுமண்" படங்களைப் போல இதுவும் யானையை மையப்படுத்தும் படமாக உருவாகிறது என்கிறார் மங்களேஸ்வரன்.



**தயா ரிப்பு நிறுவ னம்** தொடங்கிய மகிழ்ச்சியில் இருக்கும் ரவி மோகன், இப்போது சிவகார்த்திகேய னின் "பராசக்தி" யில் வில்லனாக நடித்து வருகிறார். அடுத்து, லோகேஷ் கனகராஜ் தயாரிப் பில், ராகவா லாரன்ஸ் நடிக்கும் "பென்ஸ்" படத்திலும் வில்லனாக கமிட் ஆகியிருக்கிறார். "பென்ஸி"இல் அவரது கேரக்டரின் தொடர்ச்சி... லோகேஷ், அடுத்தடுத்து இயக்கும் "கைதி 2", "விக்ரம் 3" படங்களி லும் பிரதிபலிக்கும் என்றும் சொல்கிறார்கள்.

**லோகேஷ் கனகராஜ்** "கைதி 2" படத்திற்கான வேலைகளில் மும்முரமாகி விட்டார். முதல் பாகத்தின் போதே 15 சதவிகிதம் ஷூட் முடிந்திருப்பதாலும், ஸ்கிரிப்ட் தயார் நிலையில் இருப்ப தாலும் இயக்குநர் தமி ழின் "மார்ஷல்" படத் துக்கு சின்னதாய் பிரேக் விட்டு "கைதி 2"இல் நடிக் கப் போகிறார் கார்த்தி. சமந் தாவும் படத் தில் இருக்கி றார் என் கிறார்கள்



**"கில்லர்"** என்ற ஆக்ஷன் த்ரில்லர் படத்தை இயக்கி நடித்துவரும் எஸ்.ஜே.சூர்யா, இன்னொரு பக்கம் ரஜினி, கார்த்தி ஆகியோரின் படங்களி லும் நடித்துவருகிறார். இதில் கார்த்தியின் "சர்தார் 2"ஐ முடித்துக் கொடுத்துவிட்டு "ஜெயிலர் 2"இல் பிஸியாக இருக்கிறார். நெல்சன் கேட்கும் திகதிகளுக்கு ஏற்ப, தனது "கில்லர்" ஷூட்டிங்கை அமைத் துக்கொண்டு நடித்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

461


வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நிறை குறைப்பு ஆலோசனை...

**1. நான் 33 வயதுடைய பெண். எனக்கு Polycystic Ovarian Syndrome காணப்படுகின்றது. எனது நிறை 80kg. மாதவிடாய் ஒழுங்கீனம் சம்பந்தமாக வைத்தியரை சந்திக்க சென்ற போது. எனது நிறை அதிகமாக இருப்பதாகவும், அதனை குறைக்குமாறும் கூறினார். அதை முயற்சித்தும் முடியாமல் போய்விட்டது. ஏனெனில், எனக்கு Gastritis இருப்பதால், உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் போதும், பசி வரும் போதும் வயிறு எரிவு ஏற்படுகிறது. தினமும் ஒரு மணி நேரம் நடக்கிறேன். எனக்கு வேறு எந்த விதமான நோய்களும் இல்லை. இருந்தும் என்னால் நிறையைக் குறைக்க முடியவில்லை. எனது நிறையக் குறைத்துக் கொள்ள பொருத்தமான ஆலோசனைகளை வழங்க முடியுமா?...**

உங்களுக்கு மாதவிடாய் குழப்பங்கள் ஏற்படுவதற்கு, அடிப்படையிலே இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, நீங்கள் குறிப்பிட்ட Polycystic Ovarian Syndrome எனப்படும் நிலை. இரண்டாவது, அதிகரித்த உடல் நிறை. உங்கள் உடல் நிறையை குறைத்துக் கொண்டால், நோய் நிலைக்கான அறிகுறிகள் பெருமளவு குறையும். தினமும் அதிக தூரம் நடந்தும் உங்கள் உடல் நிறையை குறைத்துக் கொள்ள முடியவில்லை என கூறியிருந்தீர்கள்.

நடப்பதன் மூலம் உடல் நிறையை குறைத்துக் கொள்வது கடினமாகும். உதாரணமாக நீங்கள் ஒவ்வொரு நாளும் 2.5 km ஓடு வீரளாக இருந்தால், இரண்டு மாதங்களுக்குப் பின்னரே உங்களுக்கு 1kg நிறைக் குறைவு ஏற்படும். தினமும் 2.5km ஓடிவிட்டு ஒரு கோப்பை tea அருந்தினால் உங்களில் எவ்வித நிறைக்குறைவும் ஏற்படாது. உடற்பயிற்சி செய்வதனால் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஆனால், நிறைக்குறைப்பிலே அதனுடைய பங்களிப்பு மிகவும் குறைவு. எனவே, நிறைக்குறைப்பிற்கு உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியமாகும். உணவுக் கட்டுப்பாட்டை, சாப்பிடாமல் பசியில் இருந்து தான் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. குறிப்பாக நீங்கள் உணவைக் கட்டுப்படுத்தி நிறையக் குறைக்க முயற்சிக்கும் போது உங்களுக்கு பசி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பசி அல்லது வயிறு எரிவு ஏற்பட்டுவிட்டால், உணவுக் கட்டுப்பாட்டை சரியான முறையில் கடைப்பிடிக்க முடியாது போகும். எனவே, பசி ஏற்படாமல் போதியளவு உணவை உட்கொள்ள வேண்டும். உங்களுக்கு வேகமாக நிறையக் குறைக்க வேண்டும் என்ற தேவை இருக்கிறது. எனவே, முதல் 2 அல்லது 3 வாரங்களுக்கு நான்கு வகையான உணவுகளை போதியளவு எடுத்துக் கொள்ள வேண்டும். முதலாவது வகை, பால் அல்லது பாலினால் செய்யப்பட்ட தயிர், மோர் என்பவற்றை சீனி சேர்க்காமல் எடுக்க வேண்டும். இவற்றில் போதியளவு ஊட்டச்சத்துக்கள் காணப்படுகின்றன. இரண்டாவது வகை, பழவகைகள் ஆகும். நீங்கள் குறைந்தது மூன்று வகையான பழங்களையாவது ஒரு நாளைக்கு உண்ண வேண்டும். பொதுவாக எவ்விதமான பழங்களையும் உண்டு பசி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உலர்ந்த பழவகையான பேரீச்சம்பழம் அல்லது முந்திரிகை வத்தல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன், மாம்பழம், பலாப்பழம் போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது.




மூன்றாவது வகையான உணவு முட்டை ஆகும். இதனை மஞ்சள் கருவுடன் சேர்த்து சாப்பிடலாம். எத்தனை முட்டையும் உண்ணலாம், எவ்வடிவத்திலும் உண்ணலாம். ஆனால் எண்ணெய் சேர்த்து உண்பதை தவிர்க்க வேண்டும். நான்காவது வகையான உணவு மரக்கறிகள் ஆகும். மரக்கறிகளை தனித்தனியாக சமைத்து உண்ணலாம். குறைந்தது மூன்று வகையான மரக்கறிகளை தினமும் உண்ண வேண்டும்.

இந்த நான்கு விதமான உணவுகளிலும் எல்லா வகையான ஊட்டச்சத்துக்களும் அடங்கியுள்ளன. இவற்றிற்கு பசியைக் கட்டுப்படுத்தும் தன்மையும் காணப்படுகிறது. இவை தவிர வேறு எந்த விதமான உணவுகளையும் இந்த 2 அல்லது 3 வாரங்களுக்கு உண்ண வேண்டாம். அதன் பிறகு உங்களுக்கு எவ்வளவு நிறைக் குறைப்பு ஏற்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து படிப்படியாக நீங்கள் உண்ணும் உணவை அதிகரித்துச் செல்லலாம்.

**2. நான் 55 வயதுடைய ஆண். நான் ஆரோக்கியமாக இருக்கிறேன். ஆனால், எனக்கு உயர் குருதி அமுக்கம் இருப்பதாகக் கூறி, வைத்தியர்கள் என்னை மருந்துகளை எடுத்துக் கொள்ளுமாறு வற்புறுத்துகின்றனர். எனக்கு எவ்வித நோய் அறிகுறிகளும் இல்லை. நான் மாத்திரைகளைப் பாவிக்க வேண்டுமா?... இதற்கு பக்கவிளைவுகள் ஏற்படாதா?...**

பொதுவாக உயர் குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்திரோல் போன்ற நோய்கள் ஏற்படும் போது பலருக்கு எந்தவித அறிகுறிகளும் இருப்பதில்லை. இவற்றை கவனிக்காமல் விட்டால், இதனால் பல உள் உறுப்புக்கள் பாதிப்படைகின்றன. இந்த உறுப்புக்களில் 60% பாதிக்கப்படும் வரை எமக்கு எவ்வித அறிகுறிகளும் ஏற்படாது. அறிகுறிகள் தோன்றிய பின்னர் மருத்துவ கவனிப்பை நாடினால், உறுப்புகள் பழுதடைந்து விடும் அல்லது வெகுவாக பாதிக்கப்பட்டு விடும்.

ஆகவே, வைத்திய ஆலோசனைப்படி உங்களுக்கு அறிகுறிகள் இல்லாமல் இருந்தாலும் கூட நீங்கள் மருந்துகளை பாவிக்க வேண்டும். இதனால் உங்கள் உடல் உறுப்புகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதற்கான மருந்துகளால் சில சிறிய பக்கவிளைவுகள் ஏற்படலாம். ஆனால், மருந்துகளை பாவிக்காமல் இருப்பதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுடன் ஒப்பிடும்போது இந்த சிறிய பிரச்சினைகள் புறக்கணிக்கத்தக்கவை. எனவே, நீங்கள் எவ்வித பயமும் தயக்கமும் இல்லாமல் மருந்துகளை பாவிப்பதே நல்லது.

**3. நான் 50 வயதுடைய பெண். எனக்கு அடிக்கடி கடுங் கோபம் ஏற்படுகிறது. இது உயர் குருதி அமுக்கத்தின் அறிகுறி என்று பலர் கூறுகிறார்கள். உண்மையா?**

அடிக்கடி கோபம் ஏற்படுவது உயர் குருதி அமுக்கத்தின் அறிகுறி அல்ல. அமைதியான சுபாவம் கொண்டவர்களுக்கும் உயர் குருதி அமுக்கம் காணப்படலாம். அடிக்கடி கோபப்படுபவர்களுக்கு குருதி அமுக்கம் சாதாரணமாகவும் இருக்கலாம். அடிக்கடி கோபப்படுவது அவர்களது சுபாவம் சம்பந்தப்பட்டது. ஆனால், ஒருவர் கோபமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அவரது குருதி அமுக்கம் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவே, அமைதியான ஓய்வான நிலையிலேயே எமது உண்மையான குருதி அமுக்கத்தை அளவிட்டு அறிந்து கொள்ள முடியும். நீங்கள் உங்கள் கோபத்தை கையாள முயற்சி செய்வதோடு, குருதி அமுக்கத்தையும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை அளந்து பார்த்துக் கொள்ளுங்கள்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### காணி குத்தகைக்கு தேவை

யாழில் நிறுவனம் ஒன்றிற்கு விவசாய காணிகள் 3 வருட குத்தகைக்கு தேவை சிறிய தங்குமிடத்துடன் இருந்தால் சிறப்பு உடன் தொடர்புகொள்ளவும்.

**074 111 3822** (5342)


# கச்சதீவை இந்தியாவுக்கு வழங்கவேண்டிய அவசியம் இலங்கைக்கு இல்லை

## கொழும்பு பல்கலை சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர்

(கொழும்பு) க்ச்சத்தீவை இந்தியாவுக்கு வழங்க வேண்டிய அவசியம் இலங்கைக்கு இல்லை என கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டத்தரணி எம்.ஏ.எம். ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடக நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர், இலங்கையின் இறைமையின் பிரகாரம் கச்சதீவு விவகாரம் முடிவடைந்து விட்டது. இதனை இந்தியா மீள கேட்க முடியாது கச்சதீவினுடைய முழுமையான அதிகாரம், பாதுகாப்பு என்ற அனைத்துமே இலங்கையிடமே உள்ளது என அவர் தெரிவித்தார். (நி)


# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 09.04.1963 உதிர்வு 06.09.2025

அமரர்.

## குவேந்திரநாதன் றஞ்சினிதேவி

எமது நண்பன் சுமனின் அன்புத்தாயார் **குவேந்திரநாதன் றஞ்சினிதேவி** அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். (C-3815)

நண்பர்கள் யாழ்.இந்துக் கல்லூரி 2002 A/L


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 200-300 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 150 | 120 |
| தக்காளி | 100 | 100 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 230 |
| கோவா | 250 | 260 | 250 | 220 |
| கரட் | 300 | 350 | 300 | 260 |
| பூசணி | 60 | 100 | 50 | 50 |
| புடோல் | 150 | 200 | 150 | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 150 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 350 |
| வெண்டக்காய் | 120 | 150 | 150 | 120 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 350 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 180 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 100 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 | 280 |
| போஞ்சி | 600 | 500 | 350 | 350 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | -- |
| கீரை – 1 பிடி | 100 | 50-120 | 150 | 80 |
| தேசிக்காய் | 400 | 500 | 600 | 400-650 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 | 120-200 |
| இராசவள்ளி | 800 | 650 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 300 | 150 |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 100 |

# இராசிபலன்

07.09.2025
ஆவணி 22, ஞாயிற்றுக்கிழமை
பூரணை பின்னிரவு 12.28 மணிவரை

சதயம் முன்னிரவு 11.13 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை

பூரணை விரதம்
சந்திராஷ்டமம்- பூரம், ஆயில்யம்

**வளவன்**

**மேஷம்** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கடகம்** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், முன்கோபமும், அலைச்சலும் ஏற்படலாம், அதிகாரிகளின் ஆதரவும் பெருகும் நாள்.

**ரிஷபம்** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளை நிறைவேற்றுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**மிதுனம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி** கூட்டு முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிரிகள் உதிரியாகும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், எதிர்பாராத தனவரவும் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

வாக்குறுதியைப் பொறுத்தவரை ஒவ்வொருவரும் கோடீஸ்வரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கராத்தே வீரர்கள் நிர்க்கதியாக்கப்பட்ட சம்பவம்; முழு விசாரணை நடத்த பணிக்குழு நியமனம்



### விளையாட்டுத்துறை அமைச்சர்– சுனில் குமாரகே

**சீனாவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய 23 ஆவது ஆசிய கராத்தே சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்க இலங்கை கராத்தே அணி வீர, வீராங்கனைகள் கட்டுநாயக்க சர்வதேச விமாநிலையம் வரை சென்று அங்கு விசா கிடைக்காமல் நிர்க்கதியாக்கப்பட்ட சம்பவம் குறித்து முழு விசாரணை நடத்த விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரம் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.**

இந்த தவறு எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து கண்டறிய பணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சு கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச போட்டி ஒன்றுக்கான விசா நடைமுறைகள் மற்றும் பயண செலவுகள் உட்பட போக்குவரத்து ஏற்பாடுகளுக்கு குறித்த விளையாட்டு சங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதன்போது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமாரகே, ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.எச்.மார்சோ தலைமையிலேயே பணிக் குழு ஒன்றை அமைத்துள்ளார். விளையாட்டு சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தியே அமைச்சர் இந்த பணிக் குழுவை அமைத்திருப்பதாக அமைச்சரின் ஊடகச் செயலாளர் துவான் நசீர் தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிக்காக வீரர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்டுச் செல்ல விருந்தனர். எனினும், விமானம் பி.ப. 2 மணிக்கு புறப்பட்ட நிலையில், தேவையான விசாவை குறித்த நேரத்திற்கு பெற முடியாமல் போனது.

இதனால் இந்தப் போட்டிக்கு பங்கேற்க தகுதி பெற்ற 29 வீர, வீராங்கனைகளும் மீண்டும் வீட்டுக்கே திரும்ப வேண்டி ஏற்பட்டது.

இந்த பயணத்திற்கான செலவுக்கு ஒவ்வொரு வீரரும் இலங்கை கராத்தே- சம்மேளனத்திற்கு 580,000 ரூபாவை வழங்கியுள்ளனர். இந்த சம்மேளன அதிகாரிகள் வீரர்களை விமான நிலையத்திற்கு செல்லும்படியும் காலையில் விசாவை வழங்குவதாகவும் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தத் தவறுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சு கூறியது. இந்த அணியில் பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)


## தேசிய ரீதியில் சிறந்த குத்துச்சண்டை வீராங்கனையானார் வவுனியாவைச் சேர்ந்த கீர்த்தனா



காலி மாவட்டத்தில் இடம்பெற்ற 49ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வரலாற்றில் முதற் தடவையாக சிறந்த குத்துச் சண்டை வீராங்கனையாக யு.கீர்த்தனா தெரிவாகி வவுனியா மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் குறித்த தேசிய விளையாட்டு விழாவில் வவுனியா மாவட்டத்திலிருந்து பங்கு பற்றி குத்துச்சண்டை போட்டியில் 02 தங்கம், 03 வெள்ளி மற்றும் 03 வெண் கலப் பதக்கத்தினை பெற்று பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## தேசிய மல்யுத்த போட்டியில் வித்தியானந்த கல்லூரி சாதனை





பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மல்யுத்த போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி மாணவர்கள் இருவர் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

2025 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட மல்யுத்தப் போட்டி கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் இம் மாதம் 1 ஆம் திகதி வரை கம்பஹா உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி மாணவர்களான எ.ரஜிந்தன் மற்றும் எஸ்.குயின்சி ஆகியோர் வெண்கலப் பதக்கத்தினை கைப்பற்றி பாடசாலைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.(3-299)

## இங்கிலாந்துக்கு எதிரான தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்கா

தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் தென் ஆபிரிக்கா வெற்றி பெற்று 1-0 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 2 ஆவது ஒரு நாள் போட்டி லண்டன் லார்ட்சில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் ஓட்டங்கள் குவித்தது.

இதையடுத்து, 331 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி விளையாடிய இங்கிலாந்து அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 325 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.



இதன்மூலம் தென் ஆபிரிக்கா அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என தென் ஆபிரிக்கா அணி கைப்பற்றியது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அடிமைக்கு அவன் அடிமை என்பதை முதலில் உணர்த்து. பிறகு அவன் தானாக கிளர்ந்தெழுவான். - டாக்டர் அம்பேத்கர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பொலிஸ் திணைக்களத்தை முதலில் தூய்மைப்படுத்துங்கள்

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒரு தாய் தன் பிள்ளையைக் கூட்டிச் செல்கிறார்.

சுவாமி! என் மகன் சதா இனிப்புச் சாப்பிடுகின்றான். நான் என்ன கூறினாலும் அவன் கேட்பதாக இல்லை. நீங்கள்தான் இவனுக்கு ஏதேனும் புத்திமதி சொல்ல வேண்டும் என்றார்.

சுவாமி இராமகிருஷ்ணர் அந்தத் தாயைப் பார்த்து; ஒரு பத்து நாளுக்குப் பின்னர் மகனை என்னிடம் கூட்டி வாருங்கள் என்றார்.

பத்து நாட்கள் கடந்தன. மீண்டும் அந்தத் தாய் தன் மகனை சுவாமியிடம் கூட்டிச் சென்றார்.

சிறுவனைத் தன்னருகில் அழைத்த சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்; மகனே! இனிமேல் நீ இனிப்புகளை சாப்பிடக்கூடாது. உன் அம்மா சொல்கின்ற புத்திமதிகளைக் கேட்டு அதன்படி நடந்து கொள் என்றார்.

இதைப் பார்த்த அந்தத் தாய்க்கு ஆச்சரியம். சுவாமிகள் இன்று கூறிய அறிவுரையை அன்றே கூறியிருக்கலாமே.

ஏன் அதை அவர் செய்யவில்லை. இதை சுவாமிகளிடமே அந்தத் தாய் கேட்கிறார்.

அதற்கு சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்; பெண்ணே! நீ உன் மகனை என்னிடம் அழைத்து வந்தபோது, எனக்கும் இனிப்புச் சாப்பிடுகின்ற பழக்கம் இருந்தது.

நான் இனிப்பைச் சாப்பிட்டுக் கொண்டு உன் மகனை சாப்பிடாதே என்று எப்படிக் கூறமுடியும்.

ஆகையால்தான் பத்து நாள் கழித்து வருமாறு கூறினேன். இப்போது இனிப்புச் சாப்பிடுகின்ற பழக்கத்தை நான் கைவிட்டுவிட்டேன். இனி அவனுக்கு ஆலோசனை கூறும் தகுதி எனக்கு உண்டு என்றார்.

இங்குதான் சுவாமிகள் கூறிய தத்துவம் உணரப்பட வேண்டும்.

ஆம், நாம் நேர்மையாக நடந்து கொள்ளாமல் மற்றவர்களை நேர்மையாக நடந்து கொள்ளுமாறு கூறமுடியாது.

அதேபோன்றுதான் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய பொலிஸார் முதலில் தாம் நேர்மையானவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் எங்கள் நாட்டில் பொலிஸாரில் கணிசமானவர்கள் நேர்மையற்றவர்களாக உள்ளனர்.

இதனாலேயே பொலிஸாருக்கு பொதுமக்கள் மத்தியில் மதிப்பு இல்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

ஆம், இப்போது கூட இலஞ்சம் வாங்குகின்ற பொலிஸார் உள்ளனர். மதுப்பழக்கத்துக்கு ஆளாகிய பொலிஸாரால், இலஞ்சம் பெறாமல் இருக்க முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது.

உண்மையில் பொலிஸ் சேவையில் இலஞ்சம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். அப்போதுதான் பொலிஸாரால் பக்கச் சார்பற்ற முறையில் நடுநிலை நின்று சிந்திக்கவும் செயற்படவும் முடியும்.

எனவே இந்த நாட்டில் இலஞ்சம், ஊழல் மோசடி என்பன முற்றாக ஒழிக்கப்படுமென ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அடிக்கடி கூறிவருகின்றார்.

உண்மையில் ஜனாதிபதி கூறுவதை வரவேற்க வேண்டும்.

அவ்வாறு இலஞ்சம் ஊழலை ஒழிப்பதாயின், அதனை முதலில் பொலிஸாரிடம் இருந்து ஒழித்தால்தான் இலக்கை இலகுவாக அடைய முடியும்.

இதற்கான விசேட திட்டத்தை அரசு அமுலாக்குவது அவசியமாகும்.

# பொலிஸார் கடும்போக்குவாதிகளாக மாறியமைக்கு ஜே.வி.பியே காரணம்

## சாடுகிறார் முஜிபுர் ரஹ்மான்

(கொழும்பு)

ஆரம்பகாலங்களில் மிகவும் அமைதியான முறையில் செயற்பட்டிருந்த பொலிஸார், ஜே.வி.யின் செயற்பாடுகள் காரணமாகவே கடும்போக்காளர்களாக மாறியதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பிரதான காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

அன்புடன் மக்களால் விளிக்கப்பட்ட பொலிஸார் பிற்காலத்தில் மரியாதைக்கு உரித்தற்றவர்களாக பார்க்கப்பட்டதாக ஜனாதிபதி அநுர பொலிஸ் தினத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆரம்ப காலங்களில் அமைதியைக் காக்கும் அதிகாரிகளாகப் பொலிஸார் அறியப்பட்டனர். அவர்கள் ஆயுதமேந்திய படையினராக இருக்கவில்லை. சிறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே பொலிஸ்துறை ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் அவர்களை ஜே.வி.பியினரே கடும்போக்காளர்களாக மாற்றினர்.

1971ம் ஆண்டு கிளர்ச்சியில் ஜே.வி.பியினர் பொலிஸாரைக் கொலை செய்தனர். அதேபோல 88,89 கலவரங்களில் பொலிஸாரையும் அவர்களது குடும்பத்தினரையும் ஜே.வி.பியினர் கொன்று குவித்தனர்.

பொலிஸாருக்கு எதிராக ஜே.வி.பியினர் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். அதன் பின்னரே கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்குப் பொலிஸார் தள்ளப்பட்டனர். தடிகளை மாத்திரம் கொண்டிருந்தவர்களுக்கு ஆயுதங்களை ஏந்தும் சூழலை ஜே.வி.பியினரே உருவாக்கினர்.

ஜே.வி.பியின் வன்முறையை இல்லாமல் செய்யவே பொலிஸார் வன்முறையை கையில் எடுத்தனர். எனவே வன்முறையை கையில் எடுத்தமைக்குப் பொலிஸாரைக் குற்றம் சுமத்த எவருக்கும் உரிமை இல்லை என்றார். (ந-7)

# குடும்பப் பெண் படுகொலையின் பிரதான சூத்திரதாரி யாழில்

## பொலிஸார் வலைவீச்சு

(அம்பாறை)

அம்பாறையில் தனித்திருந்த குடும்பப்பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகியுள்ளார்.

இந்நிலையில் பிரதான சூத்திரதாரியின் சகோதரன் உள்ளிட்ட இருவரைக் கைது செய்த பொலிஸார் யாழில் தலைமறைவாகியுள்ள பிரதான சூத்திரதாரியைக் கைது செய்வதற்கான பொறிமுறையைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அம்பாறை - பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஷ்ணு கோயில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த 38 வயது மதிக்கத்தக்க இரண்டு பிள்ளைகளின் தாயான மனோதர்ஷன் விதுஷா என்ற குடும்பப்பெண் கடந்த மே மாதம் வெள்ளிக்கிழமை(30) படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த பெண்ணின் படுகொலை தொடர்பில் கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த பெண்ணின் வீட்டில் பணிப்பெண்களாகப் பணியாற்றிய சகோதரிகளான இரட்டையர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் கல்முனை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர்.

இதனடிப்படையில் அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து களுவாஞ்சிக்குடிப் பகுதியில் உள்ள நகைக் கடை உரிமையாளர் ஒருவரே படுகொலையின் பிரதான சூத்தரதாரி எனக் கண்டறிந்துள்ளதுடன் குறித்த கடையில் பணியாற்றிய உரிமையாளரின் சகோதரர் உட்பட பணியாளர் ஒருவரையும் நேற்று முன்தினம் (05) பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த கைது நடவடிக்கையை அறிந்த பிரதான சந்தேக நபர் தற்போது அவரது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்குத் தப்பி வந்துள்ள நிலையில் சந்தேக நபரைத் தேடி அம்பாறை மாவட்டக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பாலியல் துஷ்பிரயோகம்

# சகோதரர் இருவருக்கு 7 வருட சிறை மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

16 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளையைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி மிஹால் தீர்ப்பளித்துள்ளார்.

குற்றத்தின் பாரதூரமான தன்மை, பாதிக்கப்பட்ட சிறுமியின் நிலை இவ்வாறான குற்றங்கள் மேலும் இடம்பெறாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

7 வருடக் கடூழியச் சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக தண்டப் பணமும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.5 இலட்சம் நட்டஈட்டுத் தொகை வழங்கத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதில் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய உதவி ஒத்தாசை புரிந்தமைக்காகவே இரண்டாம் எதிரிக்கு அதே தண்டனை அதாவது 7 ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வழக்குத் தொடுநர் தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் மற்றும் சிவஸ்கந்தஸ்ரீ ஆகியோர் வழக்கை நெறிப்படுத்தி இருந்தனர். (ந-7,285)

# உரும்பிராயில் விபத்து ஒருவர் படுகாயம்

உரும்பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பலாலி வீதியூடாக கார் ஒன்று பயணித்துக் கொண்டிருந்த வேளை உரும்பிராய்ப் பகுதியில் துவிச்சக்கரவண்டி ஒன்று திடீரென குறுக்கு வீதியில் இருந்து பலாலி வீதிக்குப் பிரவேசித்துள்ளது. இதனால் கார் சடுதியாக நிறுத்தப்பட்டது.

இதன்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை...

மேலும் இத்தீர்மானத்தின் கீழ் செயற்படுத்தப்படும் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை இலங்கை தாம் தொடர்ந்து எதிர்பார்ப்பதாகவும் இலங்கையின் பிரதிநிதித்துவ அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற வெளிப்புறத் திட்டங்கள், குறிப்பாக உள்நாட்டு நல்லிணக்க முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை என இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடனும் அதன் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடனும் இலங்கை நெருக்கமான ஒத்துழைப்பைப் பேணி வருவதாகவும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும் சமநிலையுடனும் அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் நாட்டின் மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதித்துவ அலுவலகம் விபரித்துள்ளது. (ந-7)

## இளவாலையில் தனித்திருந்த ஆணொருவர் சடலமாக மீட்பு

(இளவாலை)

யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் உயிரிழந்து இரண்டு நாட்கள் கடந்திருக்கக்கூடும் என சந்தேகிக்கத்தக்க நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கொல்லாலை வீதி இளவாலையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பிரான்பீற்றர் (வயது - 67) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் தனிமையில் வசித்து வந்த நிலையில் உறவினர் ஒருவர் அவரது வீட்டுக்குச் சென்று பார்த்த போதே அவர் உயிரிழந்த விடயம் தெரியவந்துள்ளது.

மரணவிசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,104)

## பற்றைக்குள் இருந்து ஆணின் சடலம் மீட்பு

### கொக்குவிலில் பரபரப்பு

நடைப்பயிற்சியில் ஈடுபடச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த ஆணொருவரின் சடலம் கொக்குவில் கல்வாரி தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவசாமி தனபாலசுந்தரம் (வயது - 62) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் சில தினங்களுக்கு முன்னர் நடைப்பயிற்சிக்குச் சென்ற வேளை காணாமல் போயிருந்தார்.

இந்நிலையிலேயே நேற்றையதினம் கொக்குவில் கல்வாரி தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள பற்றைக்குள் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ந-7,104)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவரும்
பாடசாலைக்கான கொடையாளருமான
**திரு.இ.குவேந்திரநாதன்**
அவர்களின் பாசமிகு மனைவி

### அமரர் குவேந்திரநாதன் றஞ்சினிதேவி

எம் கண் முன்னே நடமாடிய திருமகளே!
கல்விக் கொடையாளிக்கு ஏற்ற துணைவியே!
ஏழைக் குழந்தைகளுக்கெல்லாம்
அள்ளிக் கொடுத்து கல்விக்கரம் நீட்டியவரே!
அம்மா உங்கள் துயரச் செய்தி
கேட்டதும் அதிர்ந்து போனோம்
எல்லாம் வல்ல இறைவனின்
திருப்பாதம் சேர்ந்து அமைதியுறுக.
ஆத்ம சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.
பழைய மாணவர் சங்கமும் (தாய்ச் சங்கம்)
பாடசாலைச் சமூகமும்.

(C-3816)

## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி தங்கவேல் (Doctor)
### (பதிவு வைத்திய அதிகாரி)



தோற்றம் 15.04.1953 மறைவு 05.09.2025

நவாலியினைப் பிறப்பிடமாகவும் சிங்கை நகர் புலோலி தெற்கு, புலோலியினை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் திருமதி விமலாதேவி தங்கவேல் (பதிவு வைத்திய அதிகாரி) அவர்கள் கடந்த (05.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் மூத்த அன்பு மருமகளும் திரு வி.ஜீ.தங்கவேல் (பனைவள ஆலோசகரும் சமூக செயற்பாட்டாளரும்) அவர்களின் அன்பு மனைவியும் வேளினி (அவுஸ்திரேலியா), விமல்ஷினி (சட்டத்தரணி முன்னாள் கிராமசேவை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - பருத்தித்துறை), தர்சினி (Freelancer Accountant) ஆகியோரின் அன்புமிகு தாயாரும் ரமணன் (அவுஸ்திரேலியா), நிமல்ராஜ் (பொலிஸ் உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), பிந்து மைக்கேல் (Territory Manager Asian paints - Causeway) ஆகியோரின் அன்பு மாமியாரும் கல்கி, கணியன், நிவிகேஷன், ஆருஷி பெலினா, ஆதினி மீயாழ், வினிக்ஷன் ஆகியோரின் அன்புமிக்க பேர்த்தியாரும் அமரர் சிவஞானசேகரம், விஜயதேவி, அமரர் குலசேகரம், லலிதாதேவி, சறோஜினிதேவி, றஞ்சினிதேவி, தவராஜசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிங்கை நகர்,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல் : குடும்பத்தினர்
077 535 5437, 077 802 8491
077 930 0723

(C-3819)

குடியியல் நடபடி முறைச்சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

1. தில்லையம்பலம் விஜயரட்ணமும்
2. பெண் வசந்தியும்

இருவரும்
குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி,
யாழ்ப்பாணம்

-வழக்காளிகள்-

வழக்கிலக்கம் : நானாவிதம் /467/2025

எதிர்

1. விசுவலிங்கம் ரமணீதரன்
தொண்டமனாறு வீதி,
தம்பாளை,
அச்சுவேலி.
2. கந்தசாமி அகிலேஸ்வரனும்
தலைவர்.
3. தங்கராசா பிரணவன்,
செயலாளர்
4. சுப்பிரமணியம் ஞானதீபன்
பொருளாளர்,
நீர்வேலி வடக்கு காளியம்மன்
தேவஸ்தானம்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளால் பின்வரும் நிவாரணங்கள் கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

01. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் படி அறிவித்தல் அனுப்ப அனுமதியளிக்கும் கட்டளையும்.
02. வழக்காளிகளே நீர்வேலி வடக்கு காளியம்மன் தேவஸ்தானத்தின் 10ஆம் திருவிழாவின் ஒன்றுவிட்ட ஒரு வருட சுழற்சி முறையிலான உபயகாரர்கள் என்ற கட்டளையும் தீர்ப்பும்
03. வழக்காளிகள் குறித்த 10ஆம் திருவிழாவினை சுழற்சி முறையில் செய்வதனை எதிராளிகள் தடுக்கவோ இடையூறுகள் விளைவிக்கவோ கூடாது என்ற நிரந்தர தடைகட்டளையும் தீர்ப்பும்
04. இவ்வழக்கு விழங்கி தீர்க்கப்படும் வரை வழக்காளிகள் குறித்த 10ஆம் திருவிழாவினை சுழற்சி முறையில் செய்வதனை எதிராளிகள் தடுக்கவோ இடையூறுகள் விளைவிக்கவோ கூடாது என்ற இடைக்கால தடைகட்டளையும் தீர்ப்பும்
05. இவ் வழக்கின் அவசர சூழ்நிலைகளை கருத்தில்கொண்டு வழக்காளிகள் குறித்த 10ஆம் திருவிழாவினை சுழற்சி முறையில் செய்வதனை எதிராளிகள் தடுக்கவோ இடையூறுகள் விளைவிக்கவோ கூடாது என்ற கட்டாணையும்.
06. வழக்குச் செலவும் மற்றும் இந் நீதிமன்றம் நியாயமானதெனக் கருதும் இன்னோரன்ன பிற நிவாரணங்களும்,

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறை உடைய நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடபடி முறைச்சட்டக் கோவையின் பிரிவு 16இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 09.09.2025ஆம் திகதி இம் மன்றில் அழைக்கப்பட இருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்

(5345)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமலிடம்...

கொண்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தொன்றினை வெளியிட்டமை தொடர்பிலேயே குறித்த விசாரணை இடம்பெற்றுள்ளது.

வாக்குமூலம் வழங்கியதன் பின் விமல் வீரவன்ஸ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வெளியேறினார். (ந-7)

## விபத்துக்களைத்...

யும் என்றாலும் குறித்த சட்டங்கள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு பொதுமக்களின் ஆதரவும் தேவை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

எல்ல - வெல்லவாய பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக தங்காலை நகர சபைக்குச் சென்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுபோன்ற துயரங்கள் இயற்கைப் பேரழிவுகள் அல்ல என்றும் இந்த விபத்துக்கள் தடுக்கக்கூடியவை என்றும் பிரதமர் இதன்போது மேலும் தெரிவித்தார். (ந-7)

## 36ஆவது...

மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று சனிக்கிழமை (06) 36ஆவது நாளாக சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டத்தை இளைஞர்கள் மற்றும் மன்னார் மக்கள் இணைந்து முன்னெடுத்து வருகின்ற நிலையில், குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது ஆதரவை போராட்டத்திற்கு வழங்கியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் காற்றாலை எம் கண்ணீரின் கதை சொல்லும் நாட்டை விற்று அபிவிருத்தி எதற்கு, அரசே எமது உயிரோடு விளையாடாதே, சொந்த மண்ணிலே அகதியாகும் நிலை வேண்டாம் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து மன்னார் பிரதான சுற்றுவட்டப் பகுதியில் இருந்து மன்னார் மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாகச் சென்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,285)

## பாதாள உலகத்...

போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பின் உறுப்பினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் தற்போது பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஹரக் கட்டாவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

முதலில் டுபாய்க்குத் தப்பிச்சென்று அதன் பின்னர் ஓமானில் உள்ள சொகுசு விடுதியில் தங்கியிருந்த நிலையில் மதுஷங்கவை ஓமான் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ந-7)

## அதிருகிறது...

மணித்தியாலத்துக்குள் நான்கு சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது,

நாட்டில் தற்போது தினந்தோறும் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதனால் மக்களின் வாழ்க்கை பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது. அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் வகுப்பு நடத்துவதாக எம்மைக் கேலி செய்பவர்களது ஆட்சியிலேயே இவ்வாறு இடம்பெறுகிறது.

இந்தச் சம்பவங்கள் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

இந்த அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்தின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலாகும். எனவே இவற்றை உடனடியாகத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் முன்னெடுக்கும் நல்ல விடயங்களைப் பாராட்டுவதற்கும் தவறான விடயங்களை விமர்சிப்பதற்கும் நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் உரிமையுள்ளது. சமூகத்தில் அதிகரித்து வரும் இந்த வன்முறை, கொலை கலாசாரம் உடனடியாகத் தோற்கடிக்கப்பட வேண்டும். அதுவே அரசாங்கத்தின் பொறுப்பாகும். (ந-7)

## முக்கிய விவகார...

அதில் விசேடமாக இலங்கையிலும் சர்வதேசத்திலும் பேசுபொருளாக மாறியுள்ள யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விவகாரம் குறித்து அமைச்சர் மனித உரிமைகள் பேரவையில் தெளிவுபடுத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் குறித்தும் அமைச்சர் அரசின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கவுள்ளதாகவும் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் உள்ளிட்ட அலுவலகங்களின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி உள்ளகப் பொறிமுறையின் கீழ் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்பதனை வலியுறுத்தவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-7)

## கோர...

இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் உடையார்கட்டுப் பகுதியில் வீதியைக் குறுக்கறுத்துப் பயணிக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளும் மோதுண்டதிலேயே குறித்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தின்போது தூக்கி வீசப்பட்ட நபர் மீது மற்றுமொரு வாகனம் ஏறியதன் காரணமாக அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் புதுக்குடியிருப்பு ஒன்பதாம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்திரமோகன் சானுசன் (வயது-22) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்தில் படுகாயமடைந்த மற்றைய நபர் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் விபத்துக் குறித்து புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,316)

### மஹஜன சம்பத
திகதி 2025.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 5944
U 6 1 0 6 3 5

### அத சம்பத
U 0 6 3 5
சீட்டிழுப்பு இலக்கம் 0519

### சுப தவசக்
கும்பம் 27 33 38 46

### தன நிதானய
திகதி - 2025.09.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1974
S 12 39 48 56 S

### மெகா பவர்
திகதி 06/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2292
B 17 24 38 43 63

### ஜய
திகதி 2025.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 0212
A 6 7 2 6

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4186
சீட்டிழுப்பு திகதி 06.09.2025
O 09 21 29 57
O

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 1253
மிதுனம் 14 37 39 59 மிதுனம்

### சுபிரி தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
06.09.2025 வெற்றி வாரம் 0652
T 1 4 9 7 1 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,657,073.60

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2918
சீட்டிழுப்பு திகதி 2025.09.06 தினம் சனிக்கிழமை
15 47 62 79 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,693,454.40

### சனிதா
திகதி 06.09.2025 வெற்றி வாரம் 5079
03 31 33 67 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,582,934.00

### சசிரி
வெற்றி வாரம் 0764
சீட்டிழுப்பு திகதி 06.09.2025 சனிக்கிழமை
25 41 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4630
சீட்டிழுப்பு திகதி 06.09.2025 தினம் சனிக்கிழமை
15 48 57 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,350,242.80

### லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 26 13 29 38 72
2094
06.09.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.592,370,600.00

### அத கோடிபதி
சனிக்கிழமை
வெற்றி வாரம் 2744
சீட்டிழுப்பு திகதி 2025.09.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,904,020.00
23 28 40 45 B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

வீடு வீடாக மற்றும் நிகழ்வுகளில் எமது Uber App Download மற்றும் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.

(C-3817)

070 755 5755

# உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-38118)

V2 TRAVELS 076 1410725 076 8226236

v2vacancies@gmail.com

# வடக்கில் மழைக்கு வாய்ப்பு

வடக்கு மற்றும் மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இன்று மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் மற்றைய பகுதிகளில் பொதுவாக சீரான வானிலை நிலவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று நண்பகல் 12.08 மணிக்கு அஹுங்கல்ல, எல்பிட்டிய, அமுகொட, தவலமு, தெனியாய, ஊருபொக்க, எம்பிலிப்பிட்டிய, சூரியவெவ, பெரலிஹெல மற்றும் கல்கடுவ ஆகிய பகுதிகளுக்கு மேலாக சூரியன் உச்சம் கொடுக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

## Group Classes Gr.10/11 School Syllabus

தமிழ்/ ஆங்கில மொழி மூலம்

- கணிதம்
- விஞ்ஞானம்
- ICT
- வணிகமும் கணக்கீடும்
- ஆங்கிலம்

வகுப்புக்கள் :After School/Saturday/ Sunday

(1523)

பதிவுகளுக்கும் விபரங்களுக்கும் 076 897 6665, 070 686 7695, 077 386 7695

APSS.N0. 188, K.K.S வீதி, சுன்னாகம்.

## ஆண் வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு வியாபாரம் செய்யும் அனுபவம் உள்ள 18 - 30 வயதுடைய ஆண் வேலையாள் தேவை.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மாதம் 50,000 - 60,000 அடிப்படை சம்பளம் வழங்கப்படும்.
- நிரந்தர வேலை வழங்கப்படும்.
- வியாபாரம் தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(5336)

077 937 0000, 075 988 1000

## பணிப்பெண் தேவை

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கிநின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

(5343)

075 639 8165

## கொக்குவிலில் காணி விற்பனைக்கு

கே.கே.எஸ் வீதி, தலையாளி வைரவர் கோவிலுக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. 1 ½ பரப்பு காணி முழுமையாக 1 கோடியே 90 இலட்சம். (விலை பேசித் தீர்மானிக்கப்படும்)

(C-3811)

077 784 0379

## காணி விற்பனைக்கு உண்டு

பொற்பதி வீதி, வீதி முகப்புடன் 4 ½ பரப்பு காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் இருபக்க பாதை உடன் விற்பனைக்குண்டு.

(5332)

தொடர்புகளுக்கு :

075 945 3391

## காணி குத்தகைக்கு தேவை

யாழில் நிறுவனம் ஒன்றிற்கு விவசாயக் காணிகள் 3 வருட குத்தகைக்குத் தேவை. சிறிய தங்குமிடத்துடன் இருந்தால் சிறப்பு. உடன் தொடர்பு கொள்ளவும்.

(5342)

074 111 3822

## காணி விற்பனைக்கு

காரைநகர் வீதி, மூளாய் வைத்தியசாலைக்கு அண்மையில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

தொடர்புகளுக்கு :

077 161 1853
077 043 9822

(5312)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(5158)

T.P : 077 780 3970

## பெண் வேலையாள் தேவை

வீட்டில் மேற்கொள்ளும் உணவு விநியோக சேவைக்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய சமையலாள் தேவை.

தொடர்புகளுக்கு :

077 196 6541
077 396 5382

(5326)

## காணி விற்பனைக்கு

K.K.S வீதி தெல்லிப்பளைச் சந்திக்கு அண்மையில் 8 ½ பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

077 161 1853
077 043 9822

(5312)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பிறந்த BSc, MSc தகைமையுடைய குறுகிய கால விவாகரத்தான மணமகளிற்கு உயர் கல்வி கற்ற தகுதியான மணமகனை உள்நாடு/ வெளிநாடு எதிர்பார்க்கிறோம்.

(1522)

T.P : 077 413 7211

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் திருகோணமலையில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(1518)

076 889 1308
077 839 3974

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5329)

076 663 3199

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை குருநாதர்சுவாமி கோவிலை அண்மித்த பகுதியில் 24 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

077 161 1853
077 043 9822

(5312)

## மணமகள் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, திருவோணம் 3ஆம் பாதம் (2ல் செவ்வாய்) கடையில் பணியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. சைவபோசன மணமகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1511)

077 191 7936

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம:

## அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம் கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### கேதாரகௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் விசுவாவசு வருடம் புரட்டாதித் திங்கள் 16 ஆம் நாள் (02.10.2025) வியாழக்கிழமை முதல் கௌரிவிரதம் ஆரம்பமாக விருப்பதால் விரதகாரர்கள் தங்கள் பெயர், நட்சத்திரங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கோவில் திறந்திருக்கும் நேரம்**

காலை : 6.00 மணிமுதல் 9.00 மணி வரை
மதியம் : 11.30 மணிமுதல் 12.30 மணி வரை
மாலை : 4.00 மணிமுதல் 6.00 மணி வரை

**வெள்ளி, செவ்வாய்**

காலை : 6.00 மணிமுதல் 12.00 மணி வரை

(5339)

தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 172/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 239/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | |
| 1Kg நீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2750/= | |
| 1Kg ஈக்குத்திட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 260/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1150/= | |
| 1Kg கடலை | - 378/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | 70/= |









தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(1525)

Happy Supermarket 0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 121 ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org